JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 13 | இதழ்: 3 | மே 2022 | ஆண்டு சந்தா ₹100/



# வாலிபர் உலகம்

INDEX


04 அன்புக்காக ஏங்கினேன்!

12 கர்த்தர் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்!

16 ஒரு போதும் கைவிடாதே!

30 Red Alert


இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?


அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா




# தலைவாசல்

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள்!**

தாமஸ் ஆல்வா எடிசன் இருளில் இருந்த மனிதர்களுக்கு, தன்னுடைய முழு முயற்சியால் **BULB**யை கண்டுபிடித்து கொடுத்தார். தன்னுடைய ஆராய்ச்சியின் போது 1000 முறை கடின முயற்சி செய்து அந்த பல்பைக் கண்டுபிடித்தார். அப்படிப்பட்ட அரிய கண்டுபிடிப்பை தன்னிடம் உள்ள சக ஊழியர்களோடு பகிர்ந்துக் கொண்டார். அப்பொழுது தன்னிடம் ஆய்வகத்தில் பணிபுரியும் ஒரு நபரை அழைத்து, நான் இதை எரிய வைத்து காட்டுகிறேன், இந்தப் பல்பை பிடித்துக் கொள் என்று சொல்லி அவரிடம் அந்த பல்பைக் கொடுத்தார். ஆனால் அந்தப் பல்பை வாங்கிய நபர் மிகவும் நடுக்கத்தோடு இருந்தார். காரணம், தாமஸ் ஆல்வா எடிசனுடைய மிகப் பெரிய கண்டுபிடிப்பு அது, ஒருவேளை தவறுதலாக கீழே போட்டு விடுவேனோ என்ற பயத்தில் உறைந்து நின்றுக் கொண்டிருந்தார். பயத்தின் உச்சத்தில் அந்த நபர் இருந்ததால், அந்த பல்பை கீழே போட்டு உடைத்து விட்டார். அதைப் பார்த்த அனைவருக்கும் அதிர்ச்சி, மிகப் பெரிய தவறை செய்து விட்டாய், இனி இந்த ஆய்வகத்தில் வேலை போய் விட்டது என்று எல்லோரும் நினைக்க, எடிசன் ஒன்றும் சொல்லாமல் தன்னுடைய அறைக்கு சென்று விட்டார்.

இரண்டு நாள் கழித்து பல்பை உடைத்த அதே நபரை அழைத்து, இப்பொழுது சரியாக பல்பை பிடி நான் அதை எரிய வைத்து பார்ப்பேன் என்று சொன்னது; ஆய்வகத்தில் உள்ள அனைவருக்கும் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. பல்பை உடைத்த அந்த நபரிடம் எப்படி உங்களால் மீண்டும் பல்பைக் கொடுக்க முடிந்தது என்று எடிசனிடம் சென்று எல்லோரும் கேட்டனர். உங்களுடைய உழைப்பே வீணாய் போகுமே என்று எல்லோரும் சொன்ன போது, எடிசன் கூறிய வார்த்தைகள்; இந்தப் பல்பை உண்டாக்க எனக்கு ஒரு நாள் மட்டுமே ஆனது. இந்தப் பல்ப் உடைந்தால் மீண்டும் ஒரே நாளில் உருவாக்கி விடுவேன். ஆனால் அந்த நபருடைய நம்பிக்கையை அவர் இழந்து விட்டால், அதை மீண்டும் பெறுவது மிகக் கடினம். அந்த காரியம் நடந்து விடாமல், அவருடைய நம்பிக்கையை உறுதியாக்க தான் அவரிடமே அந்தப் பல்பை மறுபடியும் கொடுத்தேன் என்றார்.

பல நேரம் நாமே நம்மேல் நம்பிக்கை வைக்காத போதும் கூட, தேவன் நம்மேல் வைக்கும் நம்பிக்கை மிகப் பெரிது. பலமுறை தோற்று போன போதும், பலமுறை அவரை மறுதலித்து பின்வாங்கி போன போதும், இயேசு நம்மைத் தேடி வந்து, நம்மை சீர்படுத்தி, பெலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி நிலைநிறுத்துவார்.



**வாலிபனே உன் மீது தேவன் வைத்திருக்கும்**
**நம்பிக்கையை வீணாக்கி விடாதே!**

**உன்னைக் கொண்டு தேவன் திட்டமிட்டதை**
**உன்னைக் கொண்டே செய்வார்!**

**நீ அவருடைய பார்வையில் ஒரு பராக்கிரமசாலி என்பதை மறந்து விடாதே!**

**பெலப்படு, புறப்படு,**
**பெரிய காரியம் தேவனுக்காக செய்ய தீவிரி!**

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# அன்புக்காக ஏங்கினேன்!



சாட்சி: திவ்யா

**சிறு வயதில் தகப்பனை இழந்து, ஆண்டவர் மேல் வெறுப்புடன் காணப்பட்ட சகோதரியை இயேசு தன் அன்பை வெளிப்படுத்தி, எப்படி தன் பக்கமாக இழுத்து, இன்றைக்கு சுவிசேஷம் அறிவிக்கும் மகளாக மாற்றி இருக்கிறார். இந்த மாற்றம் எப்படி நடந்தது என்பதை அவர்களே நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்கள்.. வாங்க கேட்கலாம்...**

**உங்களது சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் சென்னையில் திரு. கண்ணன் திருமதி நாகம்மா தம்பதிக்கு மூத்தமகளாகப் பிறந்தேன். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். நான் ஒரு பரம்பரை கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். ஆனால் இரட்சிப்பின் வாழ்க்கை என்பது இல்லை. நான் 3ம் வகுப்பு படிக்கும் போது என் அப்பா மரித்து விட்டார். அதனால் அந்த தாக்கம் ஆழமாக என் இருதயத்தில் ஆழமாக பதிந்து விட்டது. என் அம்மா ஆலயத்திற்கு போகும் போது, என்னையும் அழைப்பார்கள். கட்டாயமாக அல்ல, கடமைக்காக ஏனோ தானோ என்று சென்று கடைசி பெஞ்சில் அமர்ந்து காணிக்கை மட்டும் போட்டு வருவேன். மற்றபடி எந்தவிதமான ஈடுபாடும் எனக்கும் இயேசுவுக்கும் கிடையாது.



**ஓகே... ஈடுபாடு இல்லாமல் ஆலயத்திற்கு சென்றீர்கள்... உங்களுடைய பள்ளிப் படிப்பை பற்றி சொல்லுங்களேன்?**

நான் நன்றாகப் படிப்பேன், முதல் ஐந்து இடத்தில் இருப்பேன். பள்ளியில் மட்டும் திறமையாக நடந்துக் கொள்வதோடு மிகவும் கீழ்ப்படிவேன். மற்றபடி என் தனிப்பட்ட வாழ்க்கையில் நான் மிகவும் கோபப்படுவேன். அப்பா இல்லை என்ற வெறுப்பினால் நண்பர்கள்கூட சேர விரும்பமாட்டேன். எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பேன். நான் பள்ளிக்கு போகிறபோது, மற்ற பிள்ளைகளை அவர்களுடைய அப்பா அழைக்க வருவதை பார்த்து நான் மிகவும் ஏங்கியிருக்கிறேன். எங்கள் வீட்டில் தண்ணீர் எடுப்பது கொஞ்சம் கடினம். நானும் என் தங்கையும் தான் தண்ணி தூக்கிக் கொண்டு வருவோம். ஆனால் மற்ற அனைவர் வீட்டிலும் அவர்கள் அப்பா இப்படிப்பட்ட கடினமான வேலைகளை செய்வார்கள். அதைப் பார்க்கும்போது எனக்கு இன்னும் வருத்தமாக இருக்கும். சினிமா பார்ப்பதில் மிகவும் ஆர்வமாக இருப்பேன். எனது 15 வயது வரை இப்படியே கழிந்து விட்டது. ஏன் ஆலயத்திற்கு போக வேண்டும்? இவர் என் அப்பாவையே எடுத்துவிட்டாரே என்ற வெறுப்பில் இருந்தேன். அப்பா இல்லை என்கிற தாக்கம் எனக்குள் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.



**சரி... படிப்பில் சுட்டி... ஆனால் அப்பா இறந்ததினால் இயேசுவின் மேல் உங்களுக்கு வெறுப்பு வந்தது? எப்போது தான் ஆண்டவரை தேட ஆரம்பித்தீர்கள்?**

நான் 10ம் வகுப்பு படிக்கும்போது, எங்கள் ஊரில் இருக்கிற அக்காமார் வீட்டில் இருக்கிற பிள்ளைகளை சேர்த்து வைத்து வாரத்திற்கு ஒருநாள் fellowship நடத்த முடிவு செய்தார்கள். அதுபோல் வாரத்திற்கு ஒருமுறை அவர்கள் வருவார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால் அந்த நாளில் டியூசனுக்கு போகிறதோ, தேர்வுக்கு படிப்பது போலவோ அல்லது அம்மாவுக்கு சமையலில் உதவி செய்கிற மாதிரி ஏதாவது ஒன்று சொல்லி Fellowship-க்கு போகமாட்டேன். ஒருநாள் அவர்கள் சீக்கிரமாக வந்து இன்றைக்கு நீ வந்தே ஆக வேண்டும், எந்த காரணமும் சொல்லக்கூடாது என்று வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு போனபோது 12 பேரை வட்டமாக உட்கார வைத்து பாட்டு பாடவும், ஜெபிக்கவும் சொன்னார்கள். எது சொன்னாலும் எனக்குத் தெரியாது என்று அமர்ந்திருந்தேன். கைதட்டி பாட எனக்கு தயக்கமாக இருந்தது. ஆமென் என்கிற ஒரு வார்த்தைகூட என் வாயில் இருந்து வராது. ஜெபிக்கிறபோது கண்ணை மூட சொன்னால்கூட கண்ணை மூடாமல் கீழே குனிந்து தான் இருப்பேன்.

இப்படியாக பல நாட்கள் சென்றது. ஒருநாள் fellowshipயில் எல்லாரும் கண்ணை மூடி ஜெபியுங்கள் என்று சொன்னபோது ஜெபிக்காமல், அமைதியாக குனிந்து உட்கார்ந்து இருந்தேன். அங்கிருந்த எல்லாரும் ஜெபிக்க, ஜெபிக்க என் இருதயத்திற்குள் ஒரு

பாரமுண்டாகி, என் கண்கள் கலங்கி கண்ணீர் வர ஆரம்பித்தது. ஏன் எனக்கு இப்படி நடக்கிறது என்று எனக்குள்ளே யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்கு பிறகும் என் இருதயம் மிகவும் பாரமானதினால் என்னால் தாங்க முடியாமல் நான் பேச ஆரம்பித்தேன், ''நீங்கள் கடவுளாக இருந்தால் ஏன் என் அப்பாவை எடுத்தீங்க? சிறு வயதிலே எல்லாரும் அப்பாவோடு ஜாலியாக இருக்கிறார்கள், என்னுடைய அப்பாவை மட்டும் ஏன் எடுத்தீங்க?'' என்று கேட்டேன். அப்போது, ''நான் உனக்கு தகப்பனாக இருக்கிறேன்'' என்று ஒரு சத்தம் என் இருதயத்திற்குள் கேட்டது. அந்த சத்தம் என் இருதயத்திற்குள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. ஜெபத்தை முடித்து விட்டு வீட்டிற்கு போன பிறகும் அந்த பாரம் என்னை விடவில்லை. அந்த வார்த்தை என்னை மிகவும் அழுத்திக் கொண்டே இருந்தது.



**சூப்பர்... எப்படியோ fellowshipக்கு போக ஆரம்பித்தீர்கள்... எப்படி இயேசுவின் அன்பை ருசித்தீர்கள்?**

அதற்கு பிறகு fellowshipக்கு ஒவ்வொரு வாரமும் போக ஆரம்பித்தேன். வேதத்தைப் பற்றி யாராவது சொன்னால் உட்கார்ந்து கவனமாக கேட்பேன். பிறகு எனக்கே வேதத்தை படிக்க வேண்டும் என்கிற ஆசை வந்ததினால், எங்கள் பெரியம்மா வீட்டில் இருக்கிற வேதப்புத்தகத்தை யாருக்கும் தெரியாமல் எடுத்து படிப்பேன். எவ்வளவு நாள் தான் பெரியம்மா பைபிளை வைத்து படிப்பது என்று யோசித்து, எனக்கு பள்ளிக்கூடத்திற்கு தருகிற இரண்டு ரூபாயை சேர்த்து வைத்து, முதன்முறையாக ஒரு வேதப்புத்தகத்தை வாங்கி, இது என் பைபிள், இதை முழுவதும் படித்தே ஆக வேண்டும் என்று வெறியோடு படித்து முடித்தேன். எனக்கு வேத வசனம் மிகவும் ஆறுதலாக இருந்தது. ஆண்டவருடைய அன்பை உணர வேண்டும் என்று மிகவும் சந்தோஷமாக வாசித்து அதை உணர்ந்தேன்.

**சரி... ஆண்டவரின் அன்பை உணர்ந்து கொண்டீர்கள், ஆண்டவரை ஏற்றுக் கொண்டீர்கள்... அதன்பிறகு ஆண்டவருக்கும் உங்களுக்கும் உள்ள உறவு எப்படி இருந்தது?**

ஆண்டவருடைய அன்பைப் பற்றி மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியாது. காலையில் எழும்பியதும் வேதத்தை வாசித்து, ஜெபம் செய்து பள்ளிக்குச் செல்வேன். அப்போது இடைவெளி நேரத்தில் நான் வாசித்ததில் இரண்டு வசனத்தை ஞாபகத்தில் வைத்து, என்னுடைய இரண்டு அல்லது மூன்று நண்பர்களிடம் அதை சொல்வேன். இப்படித்தான் என் பள்ளி வாழ்க்கை இருந்தது. பிறகு, கல்லூரியில் சேர்ந்து ஒரு வருடம் எதுவும் செய்யவில்லை. ஒரு வருடத்திற்கு பிறகு ஜெபக்குழு ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி என்னுடன் பயிலும் தோழிகளை அழைத்த போது 10 பேர் வந்தார்கள். அதில் இயேசுவை அறியாத பிள்ளைகளும் இருந்தார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்து தொடர்ந்து ஜெபம் செய்து வந்தோம். அப்போது தான் முதல் லாக்டவுண் வந்தது. அந்த லாக்டவுணில் கூட நாங்கள் ஜெபத்தை விடாமல் conference call மூலம் ஜெபத்தை தொடர்ந்து செய்தோம். இப்படி போய்க்கொண்டிருக்கும்போது, ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியில் Youth Revival Igniters camp இருப்பதாக சொன்னார்கள். நான் பதிவு செய்து அதில் கலந்து கொண்டு, நான் ஏற்றுக்கொண்ட ஆண்டவரை, எப்படி மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும் என்று பலக்காரியங்களைக் கற்றுக் கொண்டேன்.

**சூப்பர்... ஆண்டவரை வெறுத்த நீங்கள் மற்றவர்களுக்கு ஆண்டவரைப் பற்றி சொல்லக் கற்றுக் கொண்டீர்கள், மற்றவர்களுக்கு சொல்ல ஆரம்பித்தீர்களா?**

முகாம் முடிந்த பின்பு எனக்கு ஒரு வேலையும் கிடைக்க கர்த்தர் கிருபை செய்தார். கோவிட் டெஸ்ட் மட்டும் எடுக்கிற வேலை கிடைத்தது. அந்த வேலைக்கு அனுப்புவதற்கு என் வீட்டில் எல்லாரும் பயந்தார்கள். உனக்கு விசுவாசம் இருந்தால் நீ போ என்று என் அம்மா சொன்னபோது, நானும் ஜெபித்தேன். உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது என்று கர்த்தர் என்னோடு பேசினார். அந்த வசனத்தை பிடித்துக் கொண்டு அந்த வேலையை செய்ய ஆரம்பித்தேன். என் கைகளினாலே கோவிட் உள்ளவர்களை நேரடியாக தொட்டிருக்கிறேன். இந்த வேலையை இரண்டு மாதங்கள் செய்ய கர்த்தர் உதவி செய்தார். கர்த்தர் வாக்குப் பண்ணினபடியே எந்த தீங்கும் என்னை அணுகாதபடி காத்துக் கொண்டார். அந்த வேலை முடிந்த பின்பு வீட்டில் இருந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். கர்த்தருடைய திட்டம் என்னவாக இருந்தது என்று எனக்குத் தெரியவில்லை. என்னோடுகூட இருந்த அக்காமார் வீட்டில் சும்மா இருக்காமல், சிறுபிள்ளைகளுக்கு சண்டே கிளாஸ் எடு என்று சொன்னார்கள். நான் இதுவரை சண்டே கிளாஸ் எடுத்ததே கிடையாது, எப்படி என்னால் முடியும் என்று



ஜெபித்து, பக்கத்தில் உள்ள சிறுபிள்ளைகளை அழைத்தபோது 20 பிள்ளைகள் வந்தார்கள். அவர்களுக்கு வாரந்தோறும் சண்டே கிளாஸ் எடுக்க ஆரம்பித்தேன்.

**சூப்பர்... சண்டே கிளாஸ் எடுக்க ஆரம்பித்தீர்கள்... அதையே செய்தீர்களா? இல்லை வேறு ஏதாவது கர்த்தருக்கென்று செய்தீர்களா?**

ஆம் செய்தேன்... ரிசல்ட் வந்தது... தனியார் மருத்துவமனையில் வேலை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். மருத்துவமனை மிகவும் தொலைவாக இருந்தது, இரவு வேலைக்கு செல்வதற்கு மிகவும் கஷ்டமாக இருந்ததால் வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு ஸ்கூட்டியில் தான் போய் வருவேன். அந்த நேரத்தில் பெண்கள் லிப்ட் கேட்டால், அவர்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் விடுவேன். கைப்பிரதிகளை சேகரித்து என் யூனிபார்ம் பையில் வைத்துக் கொள்ளும் ஒரு பழக்கம் எனக்கு இருந்தது. நான் யாரையெல்லாம் பைக்கில் ஏற்றுகிறேனோ, அவர்களிடம் ''இயேசு உங்களை நேசிக்கிறார்'' என்று இயேசுவைப் பற்றி ஏதாவது ஒரு வார்த்தை சொல்லி கைப்பிரதியையும் கொடுப்பேன். அவர்களிடம் இயேசுவை பற்றி சொல்வதற்காகவே வண்டியில் ஏற்றிச் செல்வேன். இப்படி தினமும் செய்து வருகிறேன்.



**செம... இப்படி ஒரு ஊழியத்தை செய்கிறீர்கள்! உங்களுடைய மருத்துவமனைப் பணி எப்படி இருக்கிறது?**

நான் I.C.U. துறையைத் தேர்ந்தெடுத்தேன். ஏனென்றால் அதில் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும், இன்னொன்று நோயாளிகளை முழுவதுமே நாம் தான் கவனித்து அவர்களுக்கு எது செய்ய வேண்டுமானாலும் நாம் தான் செய்ய வேண்டும். அப்போது நோயாளிகளிடம் மனம் விட்டு பேசலாம், இயேசுவைப் பற்றி சொல்லலாம் என்ற நோக்கத்தோடு ஐ.சி.யுவை தேர்ந்தெடுத்தேன். நான் பார்க்கிற ஒவ்வொரு நோயாளிக்கும் இயேசுவைப் பற்றி சொல்ல வேண்டும் என்று நான் யோசித்துக் கொண்டிருப்பேன். அப்படி சொல்ல முடியாத நிலைமை வந்தால்கூட, நான் அவர்களுக்கு மருந்துகள், அல்லது மாத்திரைகள் கொடுக்கும் போது இயேசப்பா இந்த மாத்திரைகளால் அல்ல, நீர் வந்து அவர்களை சுகமாக்கும் என்று சொல்லி ஜெபித்துவிட்டு கொடுப்பேன். ஆண்டவரைப் பற்றி பேச வாய்ப்பு கிடைக்கிறபோது அதை விடமாட்டேன். என்னுடைய வேலை நேரம் முடிந்தால்கூட இயேசுவைப் பற்றி ஒருவருக்காவது சொல்ல வேண்டுமென்று காத்திருந்து சொல்லிவிட்டு தான் போவேன். அதுமட்டுமல்லாமல் பலவிதமான பிரச்சனைகளோடு வரும் வாலிபர்களுக்கு ஆறுதலான தேவ வார்த்தைகளைச் சொல்லி, எனது சாட்சியையும் சொல்லி அவர்களுக்கு இயேசுவை அறிவித்து வருகிறேன்.



**சூப்பர்... ஆண்டவரை சொல்லி வருகிறீர்கள்... சரி வேலை செய்யும் போது இயேசுவை அறிவிப்பதால் எந்தப் பிரச்சனையும் வருவது இல்லையா?**

நிறைய வரும்... நான் யாருக்காவது சுவிசேஷம் அறிவித்து, கைப்பிரதியை கொடுத்து வரும் போதே, எனது மேலதிகாரியிடம் திட்டு வாங்குவேன். நான் தவறே செய்யவில்லை என்றாலும் கூட இயேசுவை அறிவிக்கிறதினாலேயோ என்னவோ கட்டாயமாக திட்டு வாங்குவேன். ஆண்டவர் இது எனக்கு செய்வார் என்று எதிர்பார்த்து எதையும் நான் செய்யவில்லை. அழிந்து போகிற ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் சொல்ல வேண்டும் என்ற வாஞ்சை மட்டும் தான் எனக்குள் இருக்கிறது. ஆகவே எத்தனை திட்டுகள் வாங்கினாலும், இயேசுவை அறிவிப்பதை நான் விடமாட்டேன்.

**சூப்பர்... இன்னும் அதிகமாக ஊழியம் செய்ய உங்களை வாழ்த்துகிறோம்... வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

எல்லோரும் என்னைப் போலவே செய்ய வேண்டுமென்று சொல்ல முடியாது. ஆனால் எல்லோரும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமென்று ஆசைப்பட வேண்டும். நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும் சுவிசேஷம் அறிவிக்க முடியும். தினமும் ஒரு ஆத்துமாவுக்காவது இயேசுவை அறிவிப்பேன் என்று தீர்மானம் எடுத்து ஜெபிக்கும் போது கர்த்தர் வழிவாசலை திறப்பார்.

**அன்பான வாலிபர்களே! சிறுவயதிலேயே தகப்பனை இழந்ததால் கர்த்தர் மேல் வெறுப்பும், கோபமும் கொண்ட சகோதரி ஷைலாவை தனது இளம் வாலிப வயதில் ஆண்டவரின் அன்பை அவர்களுக்கு விளங்கப்பண்ணி, தினமும் ஒருவருக்காவது சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமென்று அவர்களுக்குள் காணப்படுகிற வாஞ்சையைப் போல நீங்களும் தினமும் ஒரு நபருக்காவது இயேசுவை சொல்ல வேண்டுமென்று தீர்மானம் எடுத்து செயல்படுங்கள். உங்களை கர்த்தர் எடுத்து பயன்படுத்துவார்!** ■



வேத ஆராய்ச்சி: ரேச்சல்

# எசேக்கியேல்

## (நானே கர்த்தர் என்று அவர்கள் அறிந்துக் கொள்வார்கள்)

**அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதமும் பெரிய தீர்க்கதரிசன நூல்களில் நான்காம் புத்தகமான “எசேக்கியேல்” பற்றி சுருக்கமாகக் காணலாம்.**

### அறிமுகம்

எசேக்கியேல் தீர்க்கதரிசி தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டார். சிறைப்பட்டிருந்த இஸ்ரவேலின் பற்பல பாவங்களையும் அவர்கள் பாவ வாழ்க்கையையும் கண்டித்துரைக்கத் தேவனால் ஏவப்பட்டார். தேவனுடைய வார்த்தைக்கும் அவருக்கும் எதிர்த்து நின்ற மக்களைக் கண்டித் துரைக்கிறார்.

### ஆசிரியர்: எசேக்கியேல்

காலம்: கி.மு. 565
அதிகாரங்கள்: 48
வசனங்கள்: 1,273
வார்த்தைகள்: 39, 407
முக்கிய நபர்கள்: எசேக்கியேல்

### எசேக்கியேலில் கிறிஸ்து

கிறிஸ்து ஓர் மெல்லிய சிறுகிளை பெரிதும், உயரமுமான மலை மேல் நாட்டப்பட்டது போல் சித்தரிக்கப்பட்டுள்ளார் (17:23,24). மேலும் எசேக்கியேல் மேசியாவை, ஆட்சி செய்ய அதிகாரம் பெற்ற இராஜாவாகவும் (21:26,27), உண்மையான மேய்ப்பனாக ஊழியம் செய்கிறவர் என்றும் கூறுகிறார் (34:11-31).

### எசேக்கியேல் - சுருக்கம்

**எசேக்கியேலின் அழைப்பும், ஊழியமும்**

- எசேக்கியேல் தேவனின் மகிமையைக் காண்கிறார் (1:1-28 வசனங்கள்)
- ஆண்டவர் வார்த்தையை அறிவிக்க அழைக்கப் படுகிறார் (2:1-3:27 வசனங்கள்)

**எருசலேம் யூதேயா மீது இப்போதைய நியாயத்தீர்ப்பு**

- வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கான 4 அடையாளங்கள் (4, 5 அதிகாரங்கள்)
- வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கான 2 செய்திகள் (6, 7 அதிகாரங்கள்)
- 4 தீர்க்கதரிசனங்கள் (8-11 அதிகாரங்கள்)
- நியாயத்தீர்ப்புக்கான நிச்சயமும் அதன் விளைவுகளும் (12-24 அதிகாரங்கள்)

**புற இன நாடுகளுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்**

- அம்மோனியருக்கு எதிராக (25:1-7 வசனங்கள்)
- மோவாபியருக்கு எதிராக (25:8-11 வசனங்கள்)
- ஏதோமியருக்கு எதிராக (25:12-14 வசனங்கள்)
- பெலிஸ்தியருக்கு எதிராக (25:15-17 வசனங்கள்)
- திருவுக்கு எதிராக (26-28:19 வசனங்கள்)
- சீதோனுக்கு எதிராக (28:20-26 வசனங்கள்)
- எகிப்துக்கு எதிராக (29-32 அதிகாரங்கள்)

**இஸ்ரவேலர் புதுப்பிக்கப்படுதலுக்கான தீர்க்கதரிசனங்கள்**

- இஸ்ரவேலர் தங்கள் தேசத்திற்கு திரும்பி வருதல் ( 33-39 அதிகாரங்கள்)
- இஸ்ரவேலர் தங்கள் இராஜ்யத்தில் நிலைநிறுத்தப் படுதல் (40-48 அதிகாரங்கள்)




ஆலோசனை: அ

நான் பத்தாம் வகுப்பு படித்து வருகிறேன். எனது அம்மா 2 மாதத்திற்கு முன்பு வியாதியினால் மரணமடைந்து விட்டார்கள். எனக்கு என் அம்மா என்றால் உயிர். என் அம்மா என்னிடம் மிகவும் அன்பாக இருப்பார்கள். நான் படித்து ஒரு Aeronautical Engineer ஆக வேண்டும் என்பதே அவர்களின் கனவு. எனக்காக வங்கியில் சிறுக சிறுக சில ஆயிரங்களை சேர்த்து வைத்துள்ளார்கள். இப்படி என் எதிர்காலத்துக்காக ஏங்கிய என் தாய் மரித்து விட்டார்களே என்ற கவலையில் என்னால் கவனம் செலுத்தி படிக்க முடியவில்லை. என் (AE) இலட்சியம் நிறைவேறுமா என்ற பயமும், கலக்கமும் என்னை வாட்டி வதைக்கின்றது. நான் என்ன செய்வதென்று தெரியவில்லை. எனக்கு உதவி செய்யுங்கள்

– மகேஷ், திருவள்ளூர்.



அன்பு தம்பி மகேஷ்! உங்களின் வேதனையும், தாயைப் பிரிந்த துக்கமும் உங்களுக்குள் இருப்பதை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. நேசித்தவர்களை இழக்கும் போது உண்டாகும் வலியும், வேதனையும் மிகவும் பயங்கரமாக இருக்கும். மேலும் உங்களை உயிருக்குயிராய் நேசித்த அன்பு தாய் என்கிற போது அவர்களுடைய வெற்றிடத்தை நிரப்ப யாராலும் முடியாது.

ஆனால் மகேஷ், ஒருபுறம் உங்களின் தாயின் மறைவும், மறுபுறம் அவர்களின் கனவும் உள்ளது. ஒருவேளை உங்கள் தாயின் மறைவை எண்ணி துக்கத்தில் ஆழ்ந்துவிட்டால், அவர்கள் உங்களுக்காய் கண்ட கனவை நிறைவேற்ற முடியாமல் போக வாய்ப்பு உண்டு. நீங்கள் Aeronautical Engineering படிப்பை முடித்து ஒரு Assistant Aircraft Engineer-ஆக வேண்டும் என்பதே அவர்களுடைய விருப்பம்.



மகேஷ், நீங்கள் முயன்றால் இந்த வேதனையைத் தாண்டி, படிப்பைத் தொடர வாய்ப்பு உண்டு. அநேக நேரம் உங்களுக்கு முன்பாக இருக்கும் இலட்சியத்தை நோக்கி போகும் போது, பல வேதனையின் உணர்வு களையும், துக்கத்தையும் உங்களால் எளிதில் மேற்கொள்ள முடியும்.




உங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இந்த வேதனையை மாற்றி, உங்களைத் தேற்றி, அந்த வெற்றிடத்தை நிரப்ப இயேசுவால் முடியும். இயேசு உங்களின் உள்ளான மனவலியை மாற்றி, ஒரு நம்பிக்கையும், ஒரு புதிய துவக்கத்தையும் தருவார். ஒருவேளை நீங்கள் சோர்ந்து போய் துவண்டு போனால், உங்கள் தந்தையும் சோர்ந்து போவார். நீங்கள் திடமாய் இருந்தால் தான், அவருக்கு ஆறுதலாகவும், உங்கள் குடும்பம் இந்த துக்கத்திலிருந்து மீண்டு எழும்ப முடியும்.

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் தந்தை திடீரென்று இருதயக் கோளாறினால் மரித்துப் போனார். அந்த குடும்பத்தில் 2 மகள், 1 மகன். அந்தத் தாய் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்துப் போனார். உருக்குலைந்த அந்தக் குடும்பத்தில், அந்த தாயாருக்கு இருந்த ஒரே நம்பிக்கையும் ஆறுதலும் இயேசு ஒருவரே. அவர் அந்த துக்கத்திலிருந்து எழுந்து தன் கணவர் விட்டு சென்ற தொழிலைத் தொடர்ந்தார்கள். இயேசு என்னோடு உண்டு, என்னை பெலப்படுத்துவார் என்று மூன்று பிள்ளைகளையும் கரை சேர்க்க உதவுவார் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டார்கள். இன்றைக்கு அந்தத் தாயார் சாதித்து திகழ்ந்துக் கொண்டிருக் கிறார். எவ்வளவு பெரிய ஒரு துக்கமான, இக்கட்டான சூழ்நிலையில் இருந்த அந்தக் குடும்பத்தைத் தேற்றி, ஆற்றி, சுமந்து வந்தது இயேசு. அந்த இயேசு இன்றைக்கு உங்களுக்கும் செய்வார்.



### உங்களுடைய கனவாகிய படிப்பை தொடர சில ஆலோசனைகள்

✔ முதலில் நீங்கள் இருக்கும் வீட்டை மாற்ற முடியுமானால் மாற்ற முற்படுங்கள். ஏனென்றால் உங்கள் வீட்டிலுள்ள ஒவ்வொரு அறையும், பொருள்களும் உங்கள் தாயின் நினைவை உங்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்கும்.

✔ அந்த சோர்வும், மன துக்கமும் உங்களை ஆழ்த்தும் போது, அவைகளிலிருந்து வெளியே வர பாடல் கேட்பது, இசை வாசிப்பது, நல்ல நண்பர்களிடம் உரையாடுவது போன்று உங்களை நீங்களே Engage-ஆக வைத்துக் கொள்ளுங்கள்.

### ஒருவேளை அந்த துக்கத்திலே மூழ்கினால் ஏற்படும் விளைவுகள்


✔ உங்கள் துக்கத்தின் நிமித்தம் படிப்பை இழக்க வாய்ப்பு உண்டு. உங்கள் தாயாரின் கனவுகள் கலைந்து போகலாம்.

✔ உங்கள் துக்கத்தின் நிமித்தம், நீங்கள் அதிகமான மன அழுத்தத்திற்குள் சென்று, உங்கள் சரீரமும் எதிர்காலமும் பாதிக்கப் படலாம்.

✔ உங்கள் சோர்வின் நிமித்தம் உங்கள் தந்தையும் பாதிக்கப்படலாம்.

**எனவே மகேஷ், சிந்தித்து செயல்படுங்கள். இயேசு உங்களுடைய துக்கத்தை மாற்றி, உங்களுடைய இருள் சூழ்ந்த வாழ்க்கையில் மாற்றி வெளிச்சம் வீச செய்வார். பயப்படாமல் நம்பிக்கையோடு முன்னேறுங்கள், தேவன் உங்களோடு இருப்பாராக! ■**

# உலக செவிலியர் தினம்



பிரிட்டனில் செல்வச் செழிப்பு மிக்க உயர் குடிக் குடும்பத்தை சேர்ந்த நைட்டிங்கேல், இத்தாலியின் ஃபுளோரன்ஸ் நகரில் பிறந்தார். இவர் பிறந்த இடத்தின் பெயரைத் தழுவி இவருக்குப் பெயரிட்டார்கள். செவிலியர் பணிக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேல். பெற்றோர் எதிர்ப்பை மீறி நோயாளிகளைப் பராமரிக்கும் கல்வி நெறியை மேற்கொண்டு, மூன்றாண்டுகளில் நோயாளர்களைப் பராமரிப்பதில் நிபுணத்துவம் பெற்றார். அவரது பிறந்த நாளான மே 12-ம் நாள் சர்வதேச செவிலியர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. மிகுந்த இரக்கத்துடனும், அர்ப்பணிப்புடனும் செயல்படுபவர்கள் செவிலியர்கள். அன்னையரைப் போல் பரிவோடு தன்னலம் கருதாது மக்களைக் காக்கும் மகத்தான சேவை செய்பவர்கள் செவிலியர்கள். நோயாளிகளுக்கு தாயாக, தகப்பனாக, நண்பனாக தன்னலம் கருதாமல் இரவு, பகல் பாராது, அயராது உழைப்பவர்கள் செவிலியர்கள்.

**உலகம் முழுவதும் உள்ள அனைத்து செவிலியர்களுக்கும் செவிலியர் தின நல்வாழ்த்துக்கள்!**



முகப்பு செய்தி: கதிச்

# நம்பிக்கை!

மே மாதம் என்றாலே பசங்களை கையில் பிடிக்கவே முடியாது. ஒரு பக்கம் பேட்டும் கையுமாகத் தான் இருப்பார்கள். பெண் பிள்ளைகள் computer class, Special Coaching Class என்று போக்கும்வரத்துமாக இருப்பார்கள். ஒரு சிலர் இது இரண்டும் இல்லாமல் நல்ல ஜாலியாக ஊர் சுற்றுவார்கள். ஆனால் இந்த 2022ம் ஆண்டு மே மாதம் எல்லாவற்றையும் மாற்றி முதல் முறையாக ஹால் டிக்கெட், பேனா, பென்சில் என்று பள்ளி படிக்கும் அநேக மாணவர்களின் காலச் சக்கரத்தை மாற்றியுள்ளது. இந்த வருடமும் தேர்வுகள் இருக்காது, கொரோனா காப்பாற்றும் என்று நம்பிக்கையோடு இருந்த மாணவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. ஒருவேளை நீங்கள்கூட அவர்களைப் போல யோசித்து ஏமாந்து போய் இருக்கலாம். இல்லை தேர்வை எப்படி எழுத போகிறேன் என்று கலங்கி நிற்கலாம். எதுவாக இருந்தாலும், நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். ஏனெனில் ஆண்டவரின் வார்த்தை இப்படியாக சொல்கிறது, ''உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்'' (சங். 37:5).



பெரும் கனவுகளோடும் நம்பிக்கையோடும் இருக்கும் வாலிபர்களுக்கு, ஊரடங்கு நாட்களுக்குப் பின்பு அவர்களுக்கு இருக்கும் பெரும் சவால் குடும்பத்தில் இருக்கும் வறுமை, கடன், பணப் பிரச்சனை, எதிர்கால பயம் என பல சொல்லிக் கொண்டே போகலாம். தங்களுடைய எதிர்காலத்திற்கு எவ்வளவு தடைகள் வந்தாலும், நம்பிக்கையோடு இருக்கும் ஒரு சிலர் மட்டுமே தங்கள் வாழ்க்கையில் சாதித்து சாதனையாளராக மாறுகின்றனர். சிறுவயது முதல் Pilot-ஆக வேண்டும் என்ற கனவுகளுடன் இருந்த மதுரை மாவட்டத்தைச் சார்ந்த காவ்யாவுக்கு தன்னுடைய கனவை நோக்கி போகும் போது பெரும் சவால்களும், போராட்டங்களும் காத்திருந்தன. குறிப்பாக தன்னுடைய எதிர்கால கனவை நிறைவேற்றுவதற்கு பணம் ஒரு பெரும் பிரச்சனையாகவே இருந்தது. தன்னுடைய Pilot படிப்பு செலவிற்கு ஏறக்குறைய 25 லட்சம் ரூபாய் தேவைப்பட்டது. இதனால் தன்னுடைய பயிற்சியை தொடர்ந்து செய்ய முடியாமல் பாதியில் நிறுத்தினர். ஒரு பக்கம் குடும்ப சூழ்நிலையின் நிமித்தம் பண நெருக்கடி, அதே சமயத்தில் உடன் இருப்போரின் ஏளனமானப் பேச்சுகள், நம்பிக்கையற்ற மனுஷனுடைய வார்த்தைகள் இப்படி எது வந்தாலும், மனம் தளராமல், நம்பிக்கையை தளரவிடாமல், தொடர்ந்து போராடி முழு மூச்சுடன் செயல்பட்டதால் 2018ஆம் ஆண்டு விமானத்தை இயக்கும் விமானி ஆனார் காவ்யா. தமிழ்நாட்டின் முதல் பெண் விமானி காவ்யா என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களைச் சுற்றி நிறைய நேர் எதிர்மறையான சூழ்நிலைகள் இருந்தாலும், நீங்கள் சோர்ந்து போகாமல் நம்பிக்கையுடன் இருந்தால் வெற்றி பெறலாம்.





தாவீது கூட தன்னுடைய வாழ்க்கையில் நெருக்கமான சூழ்நிலைகளைக் கடந்துப் போகிறார். ஒரு பக்கம் சொந்த குடும்ப உறவுகளால் வரும் நெருக்கம், எதிரிகளால் உண்டான நெருக்கம், சூழ்ச்சிகள், ஏமாற்றங்கள், தோல்விகள் வரும்போது, தாவீதுக்கு கர்த்தர் மேல் அளவிட முடியாத நம்பிக்கை இருந்தது. அதனால் தான் அவர் நம்பிக்கையோடு, ''எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்'' (சங். 27:3) என்று சொல்கிறார். ஒருவேளை நீங்கள் கூட ஒரு நெருக்கமான வழியில் கடந்து போகலாம், என் எதிர்கால வாழ்க்கை எப்படி இருக்கும்? எழுதப் போகிற தேர்வில் வெற்றி பெறுவேனா? இல்லை மாட்டேனா? என்னால் சரியாக எழுதகூட முடியவில்லையே என்ன செய்வேன், அடுத்து என்ன படிக்கப் போகிறேன், என் எதிர்காலம் எப்படி இருக்கும்? என்று கலங்கி நம்பிக்கையற்ற நிலையில் காணப்படலாம். கலங்காதீர்கள்! ''கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்'' (நீதி. 3:26) நம்பிக்கையுடன் இருங்கள்.



யோசேப்பின் வாழ்க்கையில் தன்னுடைய கனவை நோக்கிப் போகும்போது, அவருடைய வாழ்க்கையில் எல்லாம் எதிர்மறையாகவே நடந்தது, அவர் நினைத்தபடி ஒன்றும் நடக்கவில்லை. ஒரு பக்கத்தில் குடும்பத்தாரின் வெறுப்பு, நிந்தை, அவமானம், ஏளனமான பேச்சுகள் என்று அவர் நெருக்கப்பட்டாலும் யோசேப்பு சோர்ந்து போகவில்லை. என்றைக்காவது ஒருநாள் என் கனவை என் ஆண்டவர் நிறைவேற்றுவார் என்று நம்பிக்கையுடன் இருந்தார். கர்த்தர் யோசேப்பின் நம்பிக்கையையும் பொறுமையையும் பார்த்து எகிப்து தேசத்தில் உயர்த்தினார். உங்கள் வழி எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் ஆண்டவரைப் பார்த்து நம்பிக்கையுடன், ''... கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்...'' (சங். 143:8) என்று இயேசுவை நோக்கி கூப்பிடும் போது நிச்சயம் அவர் உங்கள் நம்பிக்கையாக இருந்து, உங்களைக் காப்பாற்றுவார்.

*எனக்கன்பான வாலிபர்களே! உங்கள் கனவை நோக்கி போய்க் கொண்டிருக்கும் இந்தப் பாதையில் உங்களை சோர்வுக்குள்ளாக்கும் ஏளனமான வார்த்தைகள் உங்களை சோர்வுபடுத்தினாலும், இல்லை நீங்கள் செய்கின்ற காரியங்களில் எதிர்மறையான காரியங்கள் நடக்கலாம். இது உன்னால் செய்ய முடியாது, உனக்கு நடக்காது என்று அநேகர் உங்களின் நம்பிக்கையை கலங்கப் பண்ணினாலும், இல்லை உங்கள் மனசாட்சியே உங்களை கலங்க பண்ணலாம். இப்படி எதுவாக இருந்தாலும் சரி நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், "...நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்..." (ஏசாயா 12:2) என்று கர்த்தர் மேல் நம்பிக்கையாக இருங்கள். அவர் உங்கள் நம்பிக்கையை கனப்படுத்துவார்!* ■

## தேர்வு எழுத போகும் மாணவர்களுக்கு - உணவு

- தினமும் 3 முறை சாப்பிடுவதை 6 முறை சிற்றுண்டிகளாக பிரித்து உணவை சாப்பிடலாம்.

அதிகமாய் சாப்பிட்டால் தூக்கம் உங்கள் படிப்பை கெடுத்து விடும்.

- காலை உணவை கட்டாயம் சாப்பிட வேண்டும்.

காலை உணவை சாப்பிடாதவர்களின் மூளை 70% தான் வேலை செய்யும்.

- வேக வைத்த பயிறு வகைகள் பழங்கள் காய்கறிகள் சாப்பிட வேண்டும்.
- காஃபி, டீயை முடிந்த அளவு குறைக்க வேண்டும். இரவு 7 மணிக்கு மேல் காஃபி, டீ குடித்தால் நீங்கள் தூங்கினாலும் உங்கள் மூளை தூங்காது.
- தண்ணீர் நிறைய குடியுங்கள்.





# கர்த்தர் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்!

செய்தி: மோகன் சி.லாசரஸ்


''உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்'' (சங்கீதம் 37:5). படிப்பு காரியத்தில் தடை, வியாபாரக் காரியத்தில் தடை, வீடு கட்டுகிற காரியத்தில் தடை, திருமணக் காரியத்தில் தடை, கர்ப்பத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதில் தடையாக இருக்கிறது என்று மனசோர்வோடு இருக்கிற உங்களுக்கு, இன்றைக்கு கர்த்தர் சொல்கிறார்; நீ உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.




காரியம் வாய்க்க வேண்டுமானால், நாம் என்ன செய்ய வேண்டும்? வாக்குத்தத்தத்தை விசுவாசிக்க வேண்டும். கர்த்தர் இந்த வாக்குத்தத்தத்தை எனக்கு தந்திருக்கிறார் என்று அதை உங்களுக்கு சொந்தமாக்க வேண்டும். அது அந்தக் காலத்தில் அவர்கள் எழுதிவைத்தது, இவர்கள் எழுதிவைத்தது, அதற்கு சொன்னது என்று சொல்லிக் கொண்டிருந்தால் அற்புதத்தைக் காண முடியாது. அது அன்றைக்கு அவர்களுக்கு சொல்லப்பட்டதாக இருந்தாலும், இன்றைக்கு அந்த வாக்குத்தத்தம் நமக்குரியது என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும். வாக்குத்தத்தத்தை உங்களுக்கு உரிமையாக்கிக் கொள்வது மாத்திரமல்ல, அந்த வாக்குத்தத்தத்தைச் சொல்லி ஜெபிக்கும்போது, கர்த்தர் அப்படியே காரியத்தை வாய்க்கச் செய்வார். ஏனென்றால் அவர் வாக்கு மாறாத ஆண்டவராக இருக்கிறார்.

மனிதர்கள் வாக்குக் கொடுப்பார்கள், ஆனால் அதை மறந்து போய்விடுவார்கள். இது மனிதர்களுடைய காரியம். ஆனால் தேவன் வாக்குக் கொடுத்து விட்டால் அதை அப்படியே நிறைவேற்றுவார். கர்த்தர் ஒரு வாக்குக்கொடுத்து விட்டால், அவர் சொல் தவறாத தேவன். வார்த்தையை அப்படியே நிறைவேற்றுகிற தேவன். கர்த்தர் காரியத்தை வாய்க்கப் பண்ண வேண்டுமானால், இந்த வசனத்தில் இரண்டு காரியம் சொல்லப்படுகிறது. முதலாவது, உன் வழியை கர்த்தருக்கு நீ ஒப்புவி: உனக்கு காரியம் வாய்க்க வேண்டுமா? உன்னுடைய காரியம் ஜெயிக்க வேண்டுமா? உனக்கு வெற்றி கிடைக்க வேண்டுமா? கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டுமா? உன் வழியை நீ கர்த்தருக்கு ஒப்புவிக்க வேண்டும். இரண்டாவது, அவர்மேல் நம்பிக்கையாயிரு. உன்னுடைய நம்பிக்கை யார் மேல் இருக்கிறது? உங்கள் வேலைக்காக, தொழிலுக்காக, எதிர்காலத்திற்காக என்று உங்கள் நம்பிக்கையை யார் மேல் வைத்திருக்கிறீர்கள்? ''மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (எரே. 17:5). முதலாவது, மனிதர்கள் மேல் நம்பிக்கை வைத்து, அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், அவர்கள் எனக்கு உதவி செய்வார்கள், அவர்கள் என் தேவையை பார்த்துக் கொள்வார்கள் என்று மனிதர்கள் மேல் நம்பிக்கை வைப்பது. இரண்டாவது,

சுயத்தின் மேல் நம்பிக்கை வைப்பது: எனக்கு தைரியம் இருக்கிறது, எனக்கு பெலன் இருக்கிறது, எனக்கு தாலந்து இருக்கிறது, எனக்கு திறமை இருக்கிறது, நான் செய்து விடுவேன், நான் முடித்து விடுவேன், எனக்கு அனுபவம் இருக்கிறது என்று சுயத்தின் மீது நம்பிக்கை வைப்பது. நீங்கள் கர்த்தரை நம்பாதபடி உங்களை சிருஷ்டித்த தேவனை நம்பாதபடி, மனிதர்கள் மேல் நம்பிக்கை வைத்து, உங்கள் பலத்தின்மீது நம்பிக்கை வைத்தால் அது சாபம் என்பதாக வேதம் சொல்கிறது.



நிறைய பேர் என் படிப்பு, என் திறமை, என் முயற்சி, என்னால் முடியும் என்று சுயத்தின் மேல் நம்பிக்கை வைப்பார்கள். ஒரு சிலர் எனக்கு அந்த மினிஸ்டரை தெரியும், அவர் எல்லாம் பார்த்துக் கொள்வார் என்று மனிதர்கள் மேல் நம்பிக்கை வைப்பார்கள். இப்படி ஒரு நபர் மீது நம்பிக்கை வைக்கிறது தவறா? என்று கேட்டால், நீங்கள் கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்காமல், உங்கள் மேலும், உங்கள் திறமையின் மேலும், மனிதர்கள் மேலும் நம்பிக்கை வைத்து, உங்களை அறியாமலேயே உங்களுடைய இருதயத்தில் தேவனை விட்டு விலகுகிறீர்கள். நீங்கள் ஜெபம் செய்வீர்கள், வேதப்புத்தகத்தை வாசிப்பீர்கள், கர்த்தர் தான் எல்லாம் என்று சொல்வீர்கள். ஆனால் உங்கள் நம்பிக்கை மனிதர்கள் மேல் இருக்கும். அதனால் தான் பல சமயங்களில் நமக்கு உதவி செய்ய வருகிறவர்களைகூட தடுத்து நிறுத்துகிறார். உங்கள் நம்பிக்கை தேவன் மேல் இல்லாமல், மனிதர்கள் மேல் இருக்கிறதினால் தேவன் அதை தடுப்பதற்காக சில தடைகளை உண்டு பண்ணுகிறார். உங்களை அறியாமலேயே மனிதர்கள் மீது உங்கள் நம்பிக்கை போய் விடுகிறது. சொந்த பலத்தின்மீது உங்கள் நம்பிக்கை போய்விடுகிறது. அது சாபத்தை கொண்டு வரும். உங்கள் நம்பிக்கை யார் மீது?



சென்னையில் எனக்கு ஒரு தாயாரைத் தெரியும். அந்த தாயார் வீட்டு வேலைப் போக மற்ற நேரங்களில் எப்போதும் வேதப்புத்தகத்தை வாசிப்பதும், ஜெபிப்பதுமாக இருப்பார்கள். நான் போகும் போது வேதப்புத்தகத்தைப் பற்றியும், கர்த்தரைப் பற்றியும் தான் நிறைய கேட்பார்கள். கர்த்தருடைய வசனம் தான் அவர்களுடைய வாழ்க்கை. ஒருநாள் நான் அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, ஐயா! எனக்கு மனதில் ஒரு வருத்தம் இருக்கிறது என்றார்கள். நீங்கள் எப்போதும் ஜெபித்தும், வேதத்தை வாசித்துக் கொண்டிருக் கிறீர்கள், உங்களுக்குள் வருத்தமா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், மூன்று வருடங்களுக்கு முன்பு பிரயாணத்திற்காக பக்கத்து வீட்டிலிருந்து 300/- ரூபாய் கடனாக வாங்கிக் கொண்டு வந்தேன். மூன்று வருடம் கடந்தும் அந்தப் பணத்தை திரும்ப அனுப்ப முடியவில்லை, முந்நூறு ரூபாய்க்கு கடன் காரியாக இருக்கிறேனே, அந்தக் கடனை திருப்பிக் கொடுக்க முடியவில்லையே என்று எனக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது என்றார்கள்.

ஏன் துக்கப்படுகிறீர்கள்? உங்கள் பிள்ளைகள் நன்றாக சம்பாதிக்கிறார்கள், திருப்பிக் கொடுத்து விடலாமே என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பிள்ளைகள் கொடுப்பார்கள் என்று 3 பிள்ளைகளிடமும் ஆளுக்கு நூறு ரூபாய் கொடுங்கள் என்று கேட்டுப் பார்த்தும் யாரும் கொடுக்கவில்லை. உடனே நான், நீங்கள் எந்த நம்பிக்கையில் முந்நூறு ரூபாய் கடனாக வாங்கிக் கொண்டு வந்தீர்கள் என்று கேட்டேன். மூன்று பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினேன், நன்றாக சம்பாதிக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் வாங்கினேன் என்று சொன்னார்கள்.

அங்கு தான் நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள் என்று சொன்னதும், என்ன தவறு செய்து விட்டேன் ஐயா என்று கேட்டார்கள். நீங்கள் யாரை நம்ப வேண்டும்? யாரை நம்பி இருக்க வேண்டும்? கர்த்தரை நம்புவதற்கு பதிலாக, என் பிள்ளைகள் வேலை செய்கிறார்கள், என் பிள்ளைகள் சம்பாதிக்கிறார்கள், என் பிள்ளைகள் காசு கொடுப்பார்கள், திருப்பி அனுப்பிவிடுவேன் என்று பிள்ளைகள் மீது நம்பிக்கை வைத்து கடன் வாங்கினீர்கள். மூன்று வருடங்கள் ஆகியும் கடனை அடைக்க முடியவில்லை. நீங்கள் கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்காமல், என் பிள்ளைகள் சம்பாதிக்கிறார்கள், என் பிள்ளைகளுக்கு நல்ல வருமானம் வருகிறது, என் பிள்ளைகள் காப்பாற்றுவார்கள் என்று நம்பிக்கையை உங்கள் பிள்ளைகள் மேல் வைத்தீர்கள் என்று சொன்னதும் அவர்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். கர்த்தரை நம்பாமல் என் பிள்ளைகளை நம்பி விட்டேன், என்னை மன்னியும் என்று சொல்லி அங்கேயே

ஒப்புக்கொடுத்தார்கள். இந்த முந்நூறு ரூபாவை நீங்கள் தான் தர வேண்டும் என்று ஜெபம் செய்து பாருங்கள் என்று சொல்லி வந்தேன். அடுத்த வாரம் நான் அங்கு போனபோது, ஐயா, நீங்கள் சொன்னது போல என் பிள்ளைகளை நம்ப மாட்டேன், நீங்கள் தான் எனக்கு முந்நூறு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று ஜெபம் செய்தேன், உடனே எனக்கு கர்த்தர் பதில் கொடுத்து, முந்நூறு ரூபாயை அவர்களுக்கு அனுப்பி விட்டேன் என்று சொன்னார்கள். உங்கள் பிள்ளைகள் காசு கொடுத்தார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள்; இல்லை, வேறு ஒருவர் மூலமாய் கர்த்தர் என் தேவையை சந்தித்தார் என்று சொல்லி சந்தோஷமடைந்தார்கள்.



கர்த்தர் மேல் நம்பிக்கை வையுங்கள். வியாபாரத்தின்மீது நம்பிக்கை வைக்காதீர்கள், வியாபாரத்தை ஆசீர்வதிக்கிற கர்த்தர் மேல் நம்பிக்கை வையுங்கள். வேலை மேல் நம்பிக்கை வைக்காதீர்கள், அந்த வேலையைக் கொடுத்த கர்த்தர் மேல் நம்பிக்கை வையுங்கள். ''கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக் கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் (எரே. 17:7). உன்னுடைய நம்பிக்கை யார் மீது இருக்கிறது? எதன் மீது நம்பிக்கை வைத்திருக் கிறாய்? உன் பெற்றோர் மேலா? உன்னுடைய வியாபாரத்தின் மேலா? உன்னுடைய வேலைகள் மேலா? எதன்மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்? நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன் என்று சொல்லுங்கள். இந்த வேலையேப் போனாலும், கர்த்தர் என்னை போஷித்து, உடுத்துவிக்க வல்லவராக இருக்கிறார் என்று சொல்லிப் பழகுங்கள்.




கர்த்தர் ஒரு போதும் கைவிடவே மாட்டார். காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.

''மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்று தலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்'' (சங். 118:8). சிலருக்கு ஒரு MLAவை தெரிந்தாலே அவர்களைப் பிடிக்கவே முடியாது. அவர்கள் நம்பிக்கை MLA மேல் இருக்கும். கர்த்தர் நமக்காக MLAவையும் பயன்படுத்துவார், மினிஸ்டரையும் பயன்படுத்துவார், முதலமைச்சரையும் பயன்படுத்துவார். நம்முடைய நம்பிக்கை யார் மேல்? மனிதன்மீது அல்ல, பிரபுக்கள் மீது அல்ல, கர்த்தர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். உங்களுடைய வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

*அன்பான வாலிப மகளே(னே), அவர் காரியத்தை வாய்க்கப் பண்ணுகிற தேவன். சுயமாய் என்னத்தான் முயற்சி செய்தாலும், பிரயாசப்பட்டாலும், திறமைகளைப் பயன்படுத்தினாலும், எத்தனை பேர் உதவி செய்தாலும், கர்த்தரால் தன் காரியத்தை வாய்க்கப் பண்ண முடியும். எனவே கர்த்தர் மேல் முழு நம்பிக்கை வைத்து கர்த்தர் மேல் பற்றுதலாயிருங்கள். காரியங்களை வாய்க்கப் பண்ணுவார்! ஆமென்!* ■

## தேர்வு எழுத போகும் மாணவர்களுக்கு - ஆலோசனை




- **அமைதியான வசதியான இடத்தில் படிக்க உட்காருங்கள்.**
- **இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை தூங்குவது நல்லது.**
- **தூக்கத்தின் ஆழ்ந்த நிலையில் தான் உங்களது சரீர வளர்ச்சிக்கான அமிலம் சுரக்கிறது.**
- **இரவு முழித்து படிப்பதாலும் குறைவான மணி நேரங்கள் தூங்குவதாலும் சரீர வளர்ச்சிக்கான அமிலத்தை சரிவர சுரப்பதை தடை செய்யும்.**
- **6 மணி நேரம் தூங்குவது நியாபக சக்தியை அதிகரிக்கப் பண்ணும்.**

நிகழ்வு: கெத்சி கிளாரின்

உபவாச ஜெபம்

# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்



## உபவாசம் என்றால் என்ன?

உபவாசம் என்பது ஒருவர் சிறிதளவு உணவையோ அல்லது உணவின்றியோ, விரும்பியோ அன்றி அவசிய தேவைக்காகவோ இருத்தலாகும். உபவாசம் என்பது ஒரு சமயச்சடங்கிற்கான செயற்பாடல்ல, ஆனால் கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி ஒடுக்குதலாகும். நாங்கள் என்ன செய்கிறோம் என்பதல்ல, ஏன் இதைச் செய்கிறோம் என்பதுதான் மிக முக்கியமானதாகும்.

## வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில உபவாசங்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில்...

★ உபவாசம் என்பது ஒருவர் தனது உணவை ஒதுக்கி வெறுத்து கர்த்தரின் கோபத்தைக் குறைப்பதற்கும், தனக்கு பாவமன்னிப்பை பெற்றுக் கொள்வதற்கும் செய்யும் செயற்பாடாகும்.

★ மிகவும் அவசர நேரங்களில், ஜனங்கள் உபவாசித்து தங்களைப் பிரச்சனைகளிலிருந்து காக்கும்படி கர்த்தரை வேண்டிக் கொண்டார்கள் (நியாயா. 20:26, 1 சாமு. 7:6, 1 இராஜா. 21:9, 2 நாளா. 20:3, எரே. 36:6,9).

★ தனியாக மக்கள் உபவாசிப்பது தங்களை கர்த்தர் பிரச்சனைகளிலிருந்து பாதுகாக்கும் வண்ணமாக (2 சாமு. 12:16-20, 1 இராஜா. 21:27, சங். 35:13, 69:10), உபவாசத்தின் ஒரு பகுதியாக ஜெபம் செய்தார்கள் ( எஸ்றா 8:21, நெகே. 14:12).

★ சீனாய் மலையில் மேசேயினால் ஏற்பாடு செய்யப்பட்ட 40 நாள் உபவாசம் ( யாத். 34:28).

★ தானியேல் தரிசனம் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக மூன்று வாரங்கள் உபவாசம் மேற்கொண்டார் (தானி. 9:3, 10:3,12).

## புதிய ஏற்பாட்டுக் காலத்தில்...

★ இயேசு கிறிஸ்து உபவாசத்தைக் குறித்து பேசுகையில், மாயமற்றதாயும் அந்தரங்கத்தில் ஏறெடுக்கப்படுவதைக் குறித்தும் போதித்தார் (மத். 6:16-18).

★ பிசாசை ஜெயிக்க உபவாசம் அவசியம் (மத். 17:21).

★ தேவ வழிநடத்துதல் பெற்றுக்கொள்ள உபவாசம் அவசியம் (அப். 13:2).

## வேதாகமத்தின் அடிப்படையில் நாம் எவ்வாறெல்லாம் உபவாசம் இருக்கலாம்?

★ புசியாமலும் குடியாமலும் (யோனா 3:7); புசியாமல் மட்டும்; சிறு ஆகாரம் (1 தீமோ. 5:23); ருசியுள்ள பதார்த்தங்களை உட்கொள்ளாமல் உபவாசம் ஏறெடுக்கலாம்.

★ ஜெப வேளையில், கர்த்தருடைய சமூகத்தில் நமது பாவங்களையும் அக்கிரமங்களையும் முதலாவது அறிக்கையிட்டு; அவரை துதித்து ஆராதித்து; வேறு வேலைகளைத் தவிர்த்து உபவாசம் இருப்பது நல்லது.

★ ஏசாயா 58:7ல், ''அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப் பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக் கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக் கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்'' என்று கர்த்தர் நமக்கு கூறியிருப்பதைக் காணலாம்.

**எனவே கர்த்தருக்கு உகந்த உபவாசம் இருக்க உங்களை நீங்களே பயிற்றுவித்துக் கொள்ளுங்கள். உங்களின் உபவாச ஜெபம் இந்த எழுப்புதல் காலத்தில் அனைத்து நுகத்தடிகளையும் அரண்களையும் முறிக்கும், பிசாசுகளைத் துரத்தும், தேசங்களை சுதந்தரிக்கும் என்பதை மறந்துப் போகாதீர்கள்!** ■

சாதனை: சுமா

# ஒரு போதும் கைவிடாதே!

Hello friends! எல்லாரும் எப்படி இருக்கீங்க? நீங்க எல்லாரும் மிக உற்சாகமாகவும், உத்வேகத்துடனும் வெற்றி நடைபோட உங்களை ஒவ்வொரு நாளும் தயார்படுத்திக் கொண்டு இருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். எப்பொழுதும் எதைக் கண்டும் சோர்ந்துப் போய் விடாதீர்கள். இதோ உங்கனை இன்னும் தயார் படுத்தக்கூடிய வெற்றியாளரின் வாழ்க்கை, வருங்கால சாதனையாளர்களாகிய உங்களுக்காக!!!






எல்லா சாதனையாளர்களைப் போலவே இன்று நாம் காண இருக்கும் சாதனையாளரும் மிகவும் வறுமையான குடும்பத்தில் ஐந்து குழந்தைகளில் நான்காவது குழந்தையாகப் பிறந்தார். இந்த குழந்தையின் பெயர் தான் ‘‘மைக்கேல் ஜோர்டன்’’. ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு என்பதே எட்டா கனியாக இருந்தது. எல்லா சிறு பிள்ளைகளைப் போல மைக்கேல் ஜோர்டனால் இருக்க முடியவில்லை. குடும்ப சூழ்நிலை ஜோர்டனின் மகிழ்ச்சிக்கு பெரும் தடையாகவே இருந்தது. இதனால் ஜோர்டன் மன அழுத்தத்திற்கு தள்ளப்பட்டார். மிகவும் சோர்வான மனநிலையில் இருக்கும் போதுதான் அவருடைய அப்பா ஜோர்டனுக்கு வாழ்க்கை என்றால் என்ன? என்று புரிய வைக்க நினைத்தார். எனவே ஒரு சட்டையை ஒரு டாலருக்கு வாங்கி வந்து, அந்த சட்டையை ஜோர்டனிடம் கொடுத்து இந்த ஒரு டாலர் சட்டையை நீ 2 டாலருக்கு விற்க வேண்டும் என்று சொல்கிறார். ஜோர்டனும் ஆர்வமாக வாங்கி சென்று அதை நன்றாக துவைத்து மிக நேர்த்தியாக மடித்து அடுத்த நாள் காலையில் அதை சந்தையில் விற்க சென்றார். 13 வயது சிறுவன் மற்றும் ஏழ்மையான சிறுவன் என்பதால் அந்த சட்டையை 2 டாலருக்கு ஒரு நபர் வாங்கினார். ஜோர்டனும் அதிக ஆர்வத்துடன் அந்த 2 டாலரை பெற்றுக் கொண்டு தன் அப்பாவிடம் ஓடி வந்தார். ஆனால் ஜோர்டனின் அப்பா சிறிதும் சந்தோஷப்படாமல் 15 நாட்களுக்குப் பிறகு மறுபடியும் ஜோர்டனின் அப்பா ஒரு டாலர் மதிப்புள்ள சட்டையை 20 டாலருக்கு விற்க சொல்கிறார். ஜோர்டன் இது என்னால் முடியவே முடியாது என்று கூறினார்.



அப்பொழுது தான் இவரின் அப்பா இந்த உலகத்தில் முடியாதது என்று எதுவுமே இல்லை. இந்த சட்டையின் விலை உனக்குத் தெரியும், ஆனால் மற்றவர்களுக்குத் தெரியாது. இதை விற்கும் போது உன் திறமை உனக்குப் புரியும் என்று சொல்லி அனுப்பிவிட்டார். ஜோர்டன் இந்த முறை மிக்கி மவுஸ் புகைப்படத்தைச் சட்டையில் பிரிண்டிங் செய்து பிரபலமான பள்ளிக்கூட வாசலில் நின்று விற்க போனார். அந்த மிக்கி மவுஸ் புகைப்படத்தைப் பார்த்த ஒரு பள்ளி மாணவன் அந்த சட்டையை கூடுதலாக 5 டாலர் கொடுத்து 25 டாலருக்கு வாங்கினான். ஜோர்டனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தந்தையிடம் ஓடி வந்து 25 டாலரைக் கொடுத்தார். தந்தை மகிழ்ச்சி அடையவே இல்லை. மீண்டும் ஜோர்டனின் தந்தை ஒரு சட்டையைக் கொடுத்து இதை 20 டாலருக்கு அல்ல 300 டாலருக்கு விற்க வேண்டும் என்று கூறுகிறார். ஜோர்டனும் சோர்வுடனும் குழப்பத்துடனும் அதை வாங்கிச் சென்றார்.

அடுத்த நாள் காலை ஜோர்டன் இருக்கும் நகரில் புகழ்பெற்ற நடிகர் வருவதாக தெரிந்துக் கொண்டு, அந்த சட்டையை எடுத்துக் கொண்டு, அதில் அந்த நடிகரின் கையெழுத்தை வாங்கி அதை சந்தையில் ஏலத்திற்கு விட்டார். எல்லாரும் அந்த சட்டையைப் பெற போட்டி போட்டுக் கொண்டு 1200 டாலருக்கு வாங்கினார்கள். அதைப் பெற்றுக் கொண்டு தந்தையிடம் வந்தார். அதைப் பெற்றுக் கொண்ட ஜோர்டனின் தந்தை, இந்த தருணத்தில் நீ என்ன கற்றுக் கொண்டாய் என்று கேட்டார்.





அப்பொழுது அவர் சொன்னது, மனம் இருக்கும் இடத்தில் மார்க்கம் உண்டு (where there is a will there is a way) என்று சொல்லித் தன்னை உற்சாகப்படுத்திக் கொண்டார். வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று மிக நேர்த்தியாக கற்றுக் கொண்டார். மிகப்பெரிய விளையாட்டு வீரனாக வேண்டும் என்பதே ஜோர்டனின் கனவாக இருந்தது. அதுமட்டுமல்லாமல், கூடைப்பந்து விளையாட்டு வீரராக வேண்டும், அவர் படிக்கும் பள்ளியில் உள்ள கூடைப்பந்து அணியில் இடம் பெற வேண்டும் என்பதே இவரின் மிகப் பெரிய ஆசை. இவரின் ஆசை மற்றும் கனவிற்கு முட்டுக்கட்டையாக இருந்தது இவரின் உயரம் (5 feet 11 inch) மட்டுமே. இவர் படிக்கும் பள்ளியில் இதற்கான தேர்வு நடைபெறும்போது, எல்லாரைவிடவும் மிகவும் குள்ளமாக இருந்தார் மைக்கேல் ஜோர்டன். இவருடைய திறமை மிக அருமையாக இருந்தாலும் இவரின் உயரம் கனவை எட்ட முடியாத அளவுக்கு இருந்தது. பள்ளியில் இவர் உயரமாக இல்லை என்ற ஒரே காரணத்தால் நிராகரிக்கப்பட்டார். இதனால் சோர்ந்துப் போன ஜோர்டன் வீட்டிற்குச் சென்று கதவைப் பூட்டி அழ ஆரம்பித்தார். ஒரு மணி நேர அழுகைக்குப் பிறகு தான், உன்னுடைய திறமையை நீ தான் உலகிற்கு காட்ட வேண்டும், அதற்காக உனக்கு வரும் சந்தர்ப்பங்களை விட்டுவிடவேக் கூடாது என்று தனது தந்தை கூறிய வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தது. உடனே Coach-டம் சென்று நான் கூடைப்பந்து விளையாடவில்லை என்றாலும், என்னை இந்த அணியில் சேர்த்து கொள்ளுங்கள் என்று கூறினார். அந்த Coachம் சரி நீ விளையாடுபவர்களின் உடைகளை பாதுகாக்கும் பையனாக எங்களோடு இருந்து கொள் என்றார்.

ஜோர்டனும் விளையாட்டு வீரர்களின் சீருடை எல்லாவற்றையும் carry பண்ணிக் கொண்டு Match-க்கு செல்கிறார். அந்த Match பார்க்க ஜோர்டனின் பெற்றோரும் வந்திருந்தனர். ஜோர்டன் விளையாடும் அழகைக் காண மிகுந்த ஆர்வமுடன் காத்து இருந்தனர். ஆனால் ஜோர்டனால் அவர்களுக்கு சந்தோஷத்தை அளிக்க முடியவில்லை. என்னை நம்பி வந்த பெற்றோர்கள் முன் நான் தலைசிறந்த வீரனாக இல்லாமல் சீருடையை Carry பண்ணும் பையனாக இருக்கின்றேனே என்று எண்ணி மிகவும் வருந்தினார். வருந்தியது மாத்திரம் அல்ல, வெற்றிக்காக போராட ஆரம்பித்தார். தினமும் 2 மணி நேரம் பயிற்சியை மேற்கொண்டார். பிறகு 4 மணி நேரம் பயிற்சியை மேற்கொண்டார். அடுத்த வருடத்திலே ஜோர்டனின் உயரம் 10 inch அதிகரித்தது. இதனால் இவருடைய உயரம் 6ஆக மாறியது. அடுத்த தேர்வில் ஜோர்டன் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதில் இவருடைய திறமையை உலகம் அறிய செய்கிறார். யாரும் இவரை தோற்கடிக்க முடியாது என்ற அளவிற்கு தன்னுடைய திறமையை உலகமே வியக்கும் வண்ணம் காண்பிக்கிறார். கூடைப்பந்தாட்ட உலகின் உயரிய சாதனையாகக் கருதப்படும் MVP விருதினை இதுவரை 5 முறை வென்றுள்ளார்.

நீங்கள் எப்படி இவ்வளவு உயரம் சென்றீர்கள் என்று பேட்டியில் கேட்டதற்கு அவர் சொன்ன வார்த்தை, நீங்கள் வெற்றியாளராக மாற வேண்டும் என்று நினைத்தால் தோற்றுப்போக கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு வெற்றிக்கானப் படிகள் என்றார். என் வாழ்க்கையில் 9000 முறை ஷூட் போடும் சந்தர்ப்பத்தை வீணடித்திருக்கிறேன். இதுவரை 300 போட்டிகளில் தோல்வி அடைந்திருக்கின்றேன். நான் ஷூட் போட்டு அணியை வெற்றி பெற வைத்து விடுவேன் என்று மைதானத்தில் நம்பிய வேளையில் 26 முறை அந்த வாய்ப்பை வீணடித்திருக்கிறேன். ஒருமுறை முயற்சியை கைவிட ஆரம்பித்தால் அதுவே வாடிக்கையாகி விடும் என்று கூறினார். சிகாகோ புல்ஸ் அணிக்காக ஜோர்டன் விளையாடும் போட்டிகளில் அரங்கம் பார்வையாளர்களால் நிரம்பி வழியும். அதில் பாதி ரசிகர்கள் ஜோர்டனை மட்டுமே காண வந்தவர்கள். பார்வைக்கு அழகாக இருக்கும் ரோஜா, செடிகளில் உள்ள முற்களை தாங்கி தான் இருக்க வேண்டும். தோல்வியை காணாமல் ஜெயித்தவர்கள் இந்த உலகில் எவரும் இல்லை. ஆனால் நீ தோற்க அல்ல, ஜெயிக்க பிறந்துள்ளாய்.

**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்களும்கூட ஜோர்டன் போல ஏதோ ஒரு குறை இருக்கிறது, என்னால் எதையும் செய்ய முடியாது என்று நம்பிக்கை இழந்து போய் இருக்கிறீர்களா? நீங்கள் எடுத்த தீர்மானத்தை ஒருபோதும் கைவிடாதீர்கள்! ஜோர்டன் போல தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்! உயர்வை கண்டடைவீர்கள்!!** ●

# புறஜாதி பெண்ணின் நம்பிக்கை

சிந்தனை சிதறல்: ரெபேக்கா டேவிட்

## கானானிய ஸ்திரீ



ஆண்டவராகிய இயேசு வாழ்ந்த நாட்களில் அநேக பட்டணங்களுக்குச் சென்று அற்புதங்களை செய்து வந்தார். அதில் ஒரு பட்டணம் தீருசீதோன். அந்தப் பட்டண திசைகளில் குடியிருந்த கானானிய ஸ்திரீ இயேசுவைப் பற்றி கேள்விபட்டு, அவர் பாதத்தில் விழுந்து, தன் மகளை பிடித்து வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிற பிசாசைத் துரத்த வேண்டும் என்று இயேசுவைக் கேட்டுக் கொண்டாள். அதற்கு இயேசு, பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல என்றார். அதற்கு அவள், உண்மைதான் நாய்க்குட்டிகள் மேஜையில் இருந்து விழுகிறதை தின்னுமே என்றாள். இயேசு அவள் நம்பிக்கையை பார்த்து வியந்துப் போனார். உன் நம்பிக்கை பெரியது. நீ சொன்ன இந்த வார்த்தையினிமித்தம் பிசாசு உன் மகளை விட்டு போய் விட்டது என்றார். அந்நேரமே அவள் மகள் சுகமானாள்.

**வாலிபர்களே! நம் நம்பிக்கை ஆண்டவர் மேல் இருக்க வேண்டும். நீங்கள் எந்த மோசமான சூழ்நிலையில் இருந்தாலும், யாராக இருந்தாலும் சரி, நாம் வாசித்த கானானிய பெண்ணின் நம்பிக்கை பெரியதாயிருந்தது போல், உங்கள் நம்பிக்கை பெரியதாய் இருந்தால் இயேசு இப்பொழுது பெரிய அற்புதத்தை உங்கள் வாழ்வில் செய்வார். உங்கள் நம்பிக்கை பெரியதாயிருக்கட்டும்! அற்புதங்களை காண்பீர்கள்!**



# முழங்கால் மேல் நம்பிக்கை

## மர்காஷியஸ்

காலரா என்ற பெயரைக் கேட்டதும், உள்ளத்தில் பீதி எழும்புவது நிச்சயம். ஆம், உயிரை பறிக்கும் ஆட்கொல்லி நோய் இது. 1902ம் ஆண்டு இக்கொள்ளை நோய் திருநெல்வேலியின் நாசரேத்தைத் தாக்கியது. மக்கள் செத்து மடிந்தனர். பலர் அனாதைகளாக்கப்பட்டனர். ஆற்றுவாறும், தேற்றுவாறும் இல்லாமல் மக்கள் அழுது புரண்டனர். மர்காஷியஸ் ஐயா, மக்களின் மன நிலையை அறிந்து, மன வருத்தம் அடைந்தார். மனிதரை காப்பாற்றும் வழிமுறையை யோசித்தார். தன் முழங்காலின் மேல் நம்பிக்கை வைத்து அவசரமாய் ஆலயத்தினுள் நுழைந்து, முழங்கால்படியிட்டு அழுது, அழுது ஜெபித்தார். ஆண்டவர் மட்டுமே குணமாக்க முடியும் என்பதை அறிந்து முழு நம்பிக்கையுடன் மணிக்கணக்காய் மன்றாடி நின்றார். வேண்டுதல் கேட்கப்பட்டது. அநேகர் சுகமடைந்தனர். ''நாசரேத் நகரின் தந்தை' என்றழைக்கப்படும் மர்காஷியஸ், நாசரேத்தில் காணப்படும் ஆலயம் அவரின் கனவின் செயல் வடிவமாகும்.

**வாலிபர்களே! உங்கள் நம்பிக்கை எதன்மீது உள்ளது? சற்று யோசித்துப் பாருங்கள்! எந்த காலகட்டத்திலும் உங்கள் நம்பிக்கை முழங்காலின் மேல் இருந்தால் எப்பொழுதும் ஜெயம் கொள்வீர்கள். முழங்கால் ஜெபம் சகலத்தையும் மாற்ற வல்லமையுள்ளது. உங்கள் நம்பிக்கையை முழங்கால் மற்றும் ஜெபத்தின் மேல் வையுங்கள். விடுதலையைக் காண்பீர்கள்!**

# போராட்டத்தின் மத்தியில் நம்பிக்கை



## பவுலும் சீலாவும்

பவுலும் சீலாவும்; ஜெபம் பண்ணுகிற இடத்திற்கு போகையில் குறிசொல்கிற பெண்ணின் ஆவியை துரத்தினர். இதனால் அங்கு பெரிய பிரச்சனை ஏற்பட்டது. ஜனங்கள் கூட்டம்கூடி பவுலையும் சீலாவையும் அடித்து துன்பப்படுத்தி, வஸ்திரங்களை கிழித்து சிறைச்சாலையில் போட்டனர். சிறைச்சாலைக்காரன் இருவருடைய கால்களை தொழுமரத்தில் மாட்டி வைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் நம்பிக்கையோடு ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். அதை சிறையில் இருந்த அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறந்தது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று, சிறைச்சாலையில் தேவ வார்த்தையை கூறினார்கள். சிறைச்சாலைக்காரனும் அவனோடிருந்தவர்களும், அன்று இராத்திரியில் தேவனை நம்பி ஞானஸ்நானம் பெற்றார்கள்.

**வாலிபர்களே! தேவனுக்காக வாழும் வாழ்க்கையில் எவ்வளவு போராட்டங்கள் பிரச்சனைகள் வந்தாலும் தேவன் மேல் முழு நம்பிக்கை வைத்து, பவுல் சீலா போல் ஜெபம் பண்ணி துதித்துபாடினால் உங்கள் சிறையிருப்பு மாறும், கட்டுகள் அவிழும், உங்கள் போராட்டத்தின் மூலம் தேவன் மகிமைப்படுவார். ஆகையால் போராட்டத்தின் மத்தியில், பிரச்சனையின் மத்தியில் தேவன் மேல் நம்பிக்கையாய் இருங்கள். அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணி, போராட்டத்தை ஜெயமுள்ளதாக மாற்றுவார்! நம்பிக்கையாய் இருப்போம்!**

# பயத்தின் மத்தியில் நம்பிக்கை



## மார்வின் எக்

மார்வின் எக்கும் அவர் மனைவியும், ஆப்பிரிக்காவின் அடர்ந்த காடுகளில் வசிக்கும் காட்டுவாசிகளின் மத்தியில் ஊழியம் செய்து கொண்டு வந்தனர். சில காலம் சென்றபின் தங்களுடைய ஊழியத்தை விரிவுபடுத்த எண்ணிய அவர்கள் தங்களுக்கு வீடு கட்ட விரும்பினர். அதற்காக மார்வின் எக் பலோயிக் என்ற காட்டு ஜனங்களின் ஊருக்குப் போய், வீடு கட்டுவதற்குத் தேவையான செங்கல்களைச் செய்ய வேண்டியதாயிருந்தது. அந்த ஜனங்கள் பகலில் அவருக்கு வேலை செய்து விட்டு, இரவில் தங்கள் வீடுகளுக்குப் போய் விடுவார்கள். இவரைத் தங்கள் வீட்டிற்குள் தங்குவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. எனவே தான் கட்டும் வீட்டிற்கு பக்கத்தில் ஒரு மரத்தடியில் கட்டிலைப் போட்டு, கொசுவலையைக் கட்டிக் கொண்டு படுத்துவிட்டார். அது சிங்கங்களும், மற்ற காட்டு மிருகங்களும் நிறைந்த காடு. அன்று இரவில் சிங்கங்களின் உறுமல் சத்தத்தைக் கேட்டார். தற்பாதுகாப்புக்குத் துப்பாக்கி கூட இல்லை. ஆண்டவர் தன்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை இருந்தாலும், தன் அருகில் இருந்த கைக்கோடாரியால் சிங்கத்தைக் கொன்று விடலாம் என்று நினைத்தார். அப்பொழுது மெல்லிய சத்தம் ''நீ என்னை நம்புகிறாயா?'' மார்வின் எக், தன் விசுவாச குறைச்சலை நொந்துக் கொண்டு ஆண்டவரை முழுமையாக நம்பினார். சற்று நேரத்தில் மூன்று சிங்கங்கள் அவர் அருகில் வந்து மோப்பம் பிடித்து, வேண்டா வெறுப்புடன் கடந்து சென்றன. ஆண்டவர் தன்னைக் காப்பாற்றிய விதத்தை எண்ணி, நன்றி கூறியதோடு இச்செய்தியை அம்மக்களுக்கு எடுத்துரைத்து ஆண்டவர் மேல் உள்ள நம்பிக்கையை இன்னும் பெலப்படுத்த அவர்களுக்கு உதவினார்.

**வாலிபர்களே! நீங்கள் எந்த சூழ்நிலையில் சிக்கியிருந்தாலும், வேறு எந்த பொருள்மேலும் மனிதர்கள்மேலும் நம்பிக்கை வைக்காமல், முழுமையாக தேவனை நம்பியிருந்தால் அந்த சூழ்நிலையிலிருந்து தேவன் உங்களை தப்புவிப்பார். முழுமையாக நம்புங்கள்! தப்புவிக்கப்படுவீர்கள்!**



# எழுப்புதல் பொருளாதாரம்

எழுப்புதல் செய்தி: சதீஷ்

தேசத்தில் எழுப்புதல் வரும்போது அந்த தேசத்தின் பொருளாதாரம் ஆசீர்வதிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் எழுப்புதல் அக்கினி தேசத்தில் போடப்பட்டவுடன் அந்த தேசமே சுத்திகரிக்கப்பட்டு, சாபங்கள் மாறி ஆசீர்வாதமான மழை பெய்ய தொடங்கி விடும். தேசம் செழிப்படைவதற்கு அந்த தேசத்தை ஆளுகை செய்யும் தலைவர்கள் மீது கர்த்தருடைய ஆளுகை வரும்போது இத்தகைய மாற்றங்கள் தேசத்தில் ஏற்படும். நம்முடைய வேதத்தில்கூட எசேக்கியா, யோசபாத் போன்றோர் தேசத்தை ஆளுகை செய்யும்போது இவர்கள் கர்த்தருக்கு பிரியமானதைச் செய்ய தொடங்கினார்கள். எசேக்கியா, ஏசாயா தீர்க்கதரிசியின் தொடர்பால் கர்த்தருக்கு பிரியமானதை செய்து தேசத்தில் எழுப்புதல் உண்டாக காரணமாக இருந்தார். இவர் தன்னுடைய முதலாம் ராஜ்ய பாரத்தில் பூட்டிக் கிடந்த ஆலயத்தை பழுது பார்த்து ஆசாரியர்களையும், லேவியர்களையும் வரவழைத்து, ஆலயத்தை சரிசெய்து திரளான ஜனங்களை கர்த்தர் பக்கம் திருப்பினார். தேசம் முழுவதும் சந்தோஷமும் சமாதானமும் நிரம்பி இருந்தது. ''...எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது; தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலுடைய ராஜாவின் நாட்கள்முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை'' (2 நாளா. 30:26).





எசேக்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும் கனமும் உண்டாயிருந்தது, தேசமும் ஆசீர்வதிக்கப்பட்டு இருந்தது. இவரைப் போலவே யோசபாத்தும் கர்த்தருக்கு பிரியமான காரியங்களைச் செய்தார். யூதா விக்கிரக தோப்புகளை அகற்றி யூதா பட்டணம் முழுவதும் வேத வசனத்தை போதிக்கும் ஆசாரியர்களை எழுப்பினான். ''...யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள்'' (2 நாளா. 17:9). தேசம் முழுவதும் இவர் மூலமாக ''வசன எழுப்புதல்'' உண்டானது. யூதா பட்டணம் முழுவதும் சந்தோஷமும் சமாதானமும் இருந்தது. தேசத்தை ஆளுகை செய்யும் தலைவர்கள் மீது கர்த்தருடைய ஆளுகை வரும்போது தேசம் ஆசீர்வாதமாக இருக்கிறது. தென் கொரியா தேசம் உலக அளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11வது இடத்தில் உள்ளது. 1960களிலிருந்து 1990களின் பிற்பகுதி வரை மிக விரைவாக வளர்ந்து வந்த நாடுகளில் ஒன்றாக தென் கொரியா மாறியது. 2000ம் ஆண்டுக்கு பின்பு தேசத்தின் பொருளாதாரம் அதிகளவில் வளர்ந்தது. இதே கால கட்டத்தில் தான் தென் கொரியாவில் பால் யாங்கி சோ மூலமாக சபை உருவாக்கப்பட்டு மாபெரும் எழுப்புதல் உண்டானது. ஆண்டவர் இவர் மூலமாக தென் கொரியா தேசத்திற்கு பெரும் ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் கொடுத்தார். ஒரு பக்கம் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு மனந்திரும்பி கர்த்தர் பக்கமாக திரும்பினர். அதே சமயத்தில் தேசத்தின் தொழில்வளம் பெருகி தேசம் முழுவதும் ஆசீர்வாதமாக இருந்தது.

**எனக்கன்பான வாலிபர்களே, நம்முடைய தேசத்திலும் காணப்படுகின்ற வறுமைகள், பஞ்சம், வேலைவாய்ப்பின்மை மாறி தேசம் ஆசீர்வாதமாக இருக்க வேண்டுமானால், நம் தேசத்தின் மீதும் எழுப்புதல் அக்கினி போடப்பட வேண்டும். இந்த கடைசி கால எழுப்புதலுக்காகத்தான் அநேக தேவ மனிதர்கள் ஜெபித்தார்கள். நீங்களும் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க ஆரம்பியுங்கள், தேசம் ஆசீர்வதிக்கப்படும் பொருளாதாரமும் செழிப்படையும் ■**

# மும்பையில் வாலிபர் கொண்டாட்டம்



கடந்த ஏப்ரல் மாதம் 2ஆம் தேதி மும்பை தாராவியில் வைத்து வாலிபர் கொண்டாட்டம் கூடுகை நடைபெற்றது. இதில் 240 வாலிபர்கள் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டுச் சென்றார்கள். சகோதரர் அவினாஷ் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை கொடுத்து ஜெபித்தார்கள்.















## Testimony

Heartily thanks to my almighty God for imsiping the hearts of manyto conduct a meeting. Especially to meet the lords wonderful message for me

***- Bro.Enock Jayapaul***

Meeting was blessing for me from the start to the end. I worshipped God forgetting my worries. God spoke me through Bro Avinash - Bro.Jebaseelan I felt I have changed, I have come out of my sin

***- Sis.Abhisa***

Many things that changed by meeting. I will do service for God, joint the ministry and not to sin

***- Sis.Evangelin***

# ஜெபக் கையேடு

மே 2022

ஜெபம்: எஸ்தர்

1 கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. கோடை வெயிலின் தாக்கம் குறைய ஜெபிப்போம்.

2 வெயிலின் தாக்கத்தினால் ஏரிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

3 வெயில் அதிகரிப்பால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயம் மிகவும் பின்தங்கி விவசாயிகள் பாதிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

4 வெயிலினால் எந்த ஒரு நபரும் பாதிக்கப்படாமல் தேவன் பாதுகாத்துக் கொள்ளவும், எந்தவிதமான வியாதிகள் யாரையும் தாக்காதபடி ஜெபிப்போம்.

5 தேசத்திற்கு நல்ல மழை கிடைக்கவும், தண்ணீர் பஞ்சம் எதுவும் ஏற்படாமலிருக்கவும் கருத்தாய் ஜெபிப்போம்.

6 கோடை நாட்களில் எல்லா மாநிலங்களிலும் மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கப்பெறவும் ஜெபிப்போம்.

7 சிறுகுழந்தைகள் மற்றும் வயோதிபர்கள் இந்த வெயிலினால் பாதிக்கப்படாதபடி ஜெபிப்போம்.

8 இலங்கை மக்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கிறார்கள். இலங்கையின் பொருளாதரத்தில் முன்னேற்றம் உண்டாக ஜெபிப்போம்.

9 உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள், மருந்து இல்லாமல் மக்கள் அவதிப்படுவது முற்றிலும் தடுக்கப்பட ஜெபிப்போம்.



10 இலங்கை மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கவும், பசியினால் மரணங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

11 அத்தியாவசிய பொருட்கள், உணவுகள் கொடுத்து உதவ அனைத்து தேசங்களும் முன்வர ஜெபிப்போம்.



12 பொருளாதாரம் வளர்ச்சி அடையவும், பொருளாதாரத்தை முடக்கி அத்தேசத்தை சீரழிக்க நினைக்கும் பொல்லாத ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

13 விலைவாசி உயர்வினால் மக்கள் மிகவும் பாதிக்கப்படுவதால் அவை வன்முறையாக மாறாமல், அரசு நல்ல தீர்மானங்கள் எடுத்து செயல்பட ஜெபிப்போம்.



14 இலங்கை வாழ் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் பாதுகாக் கப்படவும், தேவ ஆளுகை அத்தேசத்தை மூடவும் எழுப்புதலின் அக்கினி போடப்படவும் ஜெபிப்போம்.

15 ரஷ்யா-உக்ரைன் தேசத்தின் போர் தடுத்து நிறுத்தப்படவும், அந்த தேசத்திற்கு சமாதானம் உண்டாகவும் ஜெபிப்போம்.



16 ரஷ்ய அதிபர் புடின் மேல் தேவ ஆளுகை உண்டாகவும், அவர் இருதயத்தை கர்த்தர் மாற்றும்படியாகவும் ஜெபிப்போம்.

**17** போரினால் இரண்டு தேசங்களிலும் மக்கள் பாதிக்கப்படுவதோடு மரணமடைகிறார்கள். இனியும் எந்த மரணங்களும் சம்பவிக்காமல் தேசங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

**18** உக்ரைன் மக்கள் மத்தியில் இருக்கின்ற பதட்டமான சூழ்நிலைகள் மாறி, சமாதானம் உண்டாக ஜெபிப்போம்.

**19** இந்தியாவில் 15 வயது முதல் 29 வயதுகுட்பட்ட வாலிபர்கள் 40 கோடி பேர் இருக்கிறார்கள். எல்லா வாலிபர்களும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**20** வேலை இழப்புகளினால் அநேக பெண் பிள்ளைகள் பணத்திற்காக தேவனுக்கு பிரியமில்லாத வேலைகளை செய்து, தன் கற்பை இழந்து நிற்கிறார்கள். அப்படிப்பட்ட வாலிபர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

**21** ஓரின சேர்க்கை என்ற பாவத்தில் சிக்கியிருக்கும் வாலிபர்களை அந்தப் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

**22** மதுபானத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் வாலிபர்கள் பாவ பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், மதுபானக்கடைகள் முற்றிலும் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

**23** உலக அளவில் பட்டினியால் நிமிடத்துக்கு 11 பேர் உயிரிழக்கிறார்கள். பட்டினியால் உயிரிழப்புகள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.











**24** உலக அளவில் 2021ஆம் ஆண்டு ஆய்வின்படி 15.5 கோடி மக்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பாதிப்புகள் நம் தேசத்திலிருந்து வெளியேற ஜெபிப்போம்.

**25** உலக அளவில் உணவுப் பொருட்களின் விலை 40% அதிகரிப்பினால் மக்களை பட்டினிக்கு தள்ளியது. பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாக ஜெபிப்போம்.

**26** ஒருவேளை உணவின்றி கோடிக்கணக்கான மக்கள் படுக்கைக்கு செல்வது தடுத்து நிறுத்தப்படவும், உணவுகள் தடையின்றி கிடைக்க ஜெபிப்போம்.

**27** திருச்சபைகள் மற்றும் போதகர்களுக்கு விரோதமாக எழும்பி கிரியை செய்யும் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

**28** சபைகளுக்குள் இருக்கும் பிரிவினையின் ஆவிகள் கட்டப்படவும், சபைகள் மீது ஜெப ஆவி ஊற்றப்படவும் ஜெபிப்போம்.

**29** கள்ளப் போதனைகளை சபைகளுக்குள், விசுவாசிகளுக்குள் கொண்டு வரும் கள்ள ஊழியர்களை அடையாளம் கண்டு கொண்டு எச்சரிக்கையாயிருக்க ஜெபிப்போம்.

**30** எழுப்புதலின் அக்கினி வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகள் மீது ஊற்றப்படவும், வாலிபர்களும் சிறுபிள்ளைகளும் தேசம் முழுவதும் அக்கினியை பரவச் செய்கிறவர்களாக எழும்பவும் ஜெபிப்போம்.

**31** ஆதி அப்போஸ்தலர்கள் நாட்களில் நடைபெற்ற அற்புத அடையாளங்களை வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகளைக் கொண்டு செய்யும்படி ஜெபிப்போம்.




நிகழ்வு: கெத்சி கிளார்வின்

## வேதாகமத்தில் பறவைகள்

# அடைக்கலான் குருவி!

அடைக்கலான் குருவி வேதத்தில் பல இடங்களில் குறிப்பிடப்படும் பறவையாகும். இவைகள் ஆசியா நாடுகளிலும், ஐரோப்பியா நாடுகளிலும், ஆப்பிரிக்கா நாடுகளிலும் வாழ்கின்றன. யோர்தான் பள்ளத்தாக்கிலும் நிறைந்துள்ளன. இதன் நீளம் 11.4 சென்டிமீட்டர். சாம்பல் நிற இறகுகள் கொண்டது. மிகச் சிறிய உருவம் கொண்டது. தானியங்கள், புல்பூண்டுகள், விதைகள் போன்றவற்றை உணவாக உண்கின்றன.

வேதத்தில் அநேக இடங்களில் அடைக்கலான் குருவியைப் பற்றி பார்க்கலாம். ‘‘என் இராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்கு தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே’ என்று சங்கீதம் 84:3ல் பார்க்கலாம்.

**மிகச்சிறிய பறவைகளுக்கும் கர்த்தருடைய வீட்டில் இடம் கிடைக்கும்பொழுது அவருடைய மக்களுக்கு அவருடைய சமூகத்தில் இடம் கிடைக்காதா?**

வேதத்தில் புதிய ஏற்பாட்டில் சிட்டுக்குருவி சில இடங்களில் குறிப்பிடப்படுகிறது. அவைகளை மக்கள் உணவாக உட்கொண்டார்கள். இப்பொழுது புறா, கோழி ஆகியவை உணவுக்காக விற்கப்படுவதுபோல் அக்காலத்தில் குருவிகளை விற்றார்கள்.

மேலும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எத்தனை பொருத்தமாக அடைக்கலான் குருவியை எடுத்துக்காட்டாக கையாளுகிறார் என்பதனை தொடர்ந்து பார்ப்போம். ‘‘ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாய் இருக்கிறீர்கள்’’ என்று இயேசு தனது சீஷர்களுக்கு வேதத்தில் குறிப்பிடுவதைக் காணலாம்.



**இத்தகைய மகத்துவமான வாக்குத்தத்தத்தை நமக்கு அளித்த இயேசு கிறிஸ்துவானவர் நம்முடன் இருக்க நாம் ஒருபோதும் ஒருநாளும் கவலைப்பட வேண்டியதில்லை என்பதில் ஏதேனும் ஐயம் உண்டோ?**

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிபர்களே! இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட நீங்கள் ஒவ்வொருவரும் விசேஷித்தவர்கள் என்பதை மறவாதீர்கள்.

**‘‘பயப்படாதிருங்கள், அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்’’ (லூக்கா 12:7)** ■

# வேதாகம
## புதையல் வேட்டை

புதிர்: ரேச்சல்

**வேதத்தில் உள்ள சில நபர்களைக் குறித்த கேள்விகள் விடுகதை வடிவில் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையைக் கண்டறிந்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1. மூடன் என்று சொன்னான்; முக்கியமானதைக் கேட்டான்;
படியை போட்டு மடியை நிரப்பி, காத்துக் கொள்ள வேண்டிக்கொண்டான்.
அவன் யார்?

2. சாத்தானின் வீட்டிலே சாத்தானுக்கு டாட்டா காட்டி;
சாட்சியாய் வாழ்ந்து வந்த உண்மையுள்ள உத்தமன். அவன் யார்?

3. வயிற்று பசி, கண்ணை மறைக்க
மண்ணை இழந்தான்; மதிகேடன். அவன் யார்?

4. கிடைத்ததற்கரிய செல்வத்தை
கையினில் வாங்கி எறிந்து போட்டான். அவன் யார்?

5. சாவுக்கு பயந்து ஓடி; ஊரை விட்டு வந்து,
சூரை தஞ்சம் கொண்டு; அயர்ந்த நித்திரை செய்த ஆண்டவரின்
அடியான் யார்?

6. வேண்டாம் என்று சொன்னதை வேண்டும் என்று கேட்கவே
கிடைத்தது பணம் சாக்கிலே வந்தது நிறம் சதையிலே. அவன் யார்?

7. யானைக்கும் அடி சறுக்கும்
இவனுக்கோ முடி சறுக்கும். இவன் யார்?

8. கணவனை இழந்தவள்; சத்தமிட்டு அழுதவள்
மாமியை முத்தமிட்டு போனவள் வரலாறு தெரியாமல் ஆனவள்...
அவள் யார்?

9. நல்ல நண்பன்; நாயகனின் சேவகன்;
மடிந்துப் போனவன்; விந்தையாய் வெளிவந்தான்... அவன் யார்?

10. ஈரெழுத்து பெரியவன்;
இன்னல் பல ஏற்றவன்; இறைவனுக்கே உகந்தவன்;
இயேசுவும் அல்ல... அவன் யார்?

### கடந்த மாத விடைகள்

1. பெருக (2 கொரி 9:6; யோவான் 3:30)
2. உயர்வு (மத். 23:12)
3. தலை (உபா. 28:14)
4. நிறைவு (1 கொரி. 13:10; பிலி. 4:19)
5. பலனற்றவன் (2 நாளா. 14:11)
6. சிறியோர் (சங். 115:13)
7. முடிவு (யோபு 8:7)
8. ஜீவன் (நீதி. 18:21)
9. நன்மை (சங். 37:26)
10. அறுப்பு (சங். 126:5)

பதில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்

**15.05.2022**

கடந்த மாத வெற்றியாளர்

**எபினேசர்**
காவல்கிணறு

JESUS REDEEMS YOUTH MINISTRIES,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

வெற்றிபெறும் ஒரு நபருக்கு Ear phone பரிசு வழங்கப்படும்

# அன்னையர் தினம்



ஒவ்வொருவரும் நாம் வாழ்க்கையில் இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம் என்றால் அதற்கு அம்மாக்கள் பல தியாகங்களை செய்திருக்க வேண்டும். நல்ல குணநலன்களை கற்பிப்பதிலிருந்து, நமது துயரமான சூழ்நிலைகளிலும்கூட இருந்து உற்சாகப்படுத்தி முன்னேற உதவி செய்தது தாயின் சிறப்பம்சம் ஆகும். அந்த தாயை கொண்டாட தான் இந்த அன்னையர் தினம் மே மாதம் 8ம் தேதி கொண்டாடப்படுகிறது.

## அன்னையர் தினத்தை எப்படி கொண்டாட

### குறும்படம் தயாரியுங்கள்

உங்களது தாயாரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை புகைப்படங்களாக வைத்திருப்பார்கள். அதை வீடியோவாக மாற்றி, அதற்கு ஒரு மியூசிக் போட்டு, குறும்படமாக தயாரித்து பரிசாக கொடுங்கள்.

### கற்றுக்கொடுங்கள்

குழந்தைகளுக்குத்தான் அம்மா எல்லாவற்றையும் கற்றுக் கொடுப்பார். ஆனால் நீங்கள் சற்று வித்தியாசமாக உங்கள் அம்மாவிற்கு ஆன்லைனில் கரண்ட் பில், தொலைபேசி பில் கட்டுவது, ஸ்கூட்டி ஓட்ட கற்றுக் கொடுப்பது போன்ற அத்தியாவசியமானவற்றைக் கற்றுக் கொடுங்கள்.

### விருந்து கொடுங்கள்

உங்களுடைய தாயார் எதை விரும்பி சாப்பிடுவார்கள் என்பதை அறிந்து அன்றைய தினம் உங்கள் தகுதிக்கு ஏற்ப ஏதாவது ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று விருந்து கொடுங்கள்.

### நினைவுகளைப் புதுப்பியுங்கள்

உங்கள் தாயாரின் வாலிப வயது புகைப்படங்கள், நண்பர்கள் மற்றும் பள்ளியில் எடுத்த புகைப்படங்களைச் சேகரித்து, கலர்புல் வண்ணத்துடன் லேட்டஸ்ட் டெக்னாலஜியை பயன்படுத்தி அவற்றை புதுப்பித்துக் கொடுக்கலாம்.

### உதவியாக இருங்கள்



இதுவரை உங்களுக்கு அனைத்து வேலைகளையும் செய்திருப்பார். அன்னையர் தினம் அன்று அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நீங்களே செய்து கொடுங்கள். சமைப்பது, வீட்டு வேலைகளைச் செய்வது போன்ற அனைத்து உதவிகளையும் செய்து அவர்களுக்கு உதவுங்கள்.

### உறவுகளை இணையுங்கள்



உங்கள் தாயாரின் வாழ்க்கையில் பிரிந்து சென்ற நண்பர்கள் மற்றும் உறவுகளை ஒன்று சேர்த்து, அவர்களுடைய பழைய பகையை சரி செய்து இணைத்து வையுங்கள். உன் தாய் வயது சென்றவளாகும் போது, ''உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே' (நீதி. 23:22). உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, ''உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக' (யாத். 20:12).

**அன்பான வாலிப தம்பி, தங்கச்சி! இந்த அன்னையர் தினத்தில் உங்களுடைய தாயை கனப்படுத்துங்கள். அன்றைய தினம் மட்டுமல்ல, எல்லா நாட்களிலும் உங்கள் பெற்றோரை கனப்படுத்த மறவாதீர்கள்! அவர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள் ■**

சிறப்புக் கட்டுரை: ரவி



# நம்பிக்கையானவர்...

என் அருமையான வாலிப தம்பி மற்றும் தங்கையே! நீங்கள் எல்லாரும் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். ஜெபத்தினாலும், வேதவசனத் தியானத்தினாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உங்கள் உறவில் நீங்களும் நானும் அனுதினமும் வளர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, இம்மாதக் கட்டுரைக்குள்ளாகச் செல்வோம்.

நண்பர்களே, அண்மை ஆண்டுகளில், இந்த உலகில் நாம் எதிர்கொள்ள நேர்ந்த சம்பவங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். கொரோனா வைரஸ் என்னும் பேரிடர், அதன் காரணமாக நேர்ந்த உயிரிழப்புகள், வேலையிழப்புகள், பொருளாதார நெருக்கடி என கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போது ரஷ்யா-உக்ரேன் இடையேயான போரின் நிமித்தமாக உயரும் விலைவாசி, மற்றும் அன்றாட பொருட்களின் விலை உயர்வு என நம்மைச் சுற்றி நிகழும் எல்லாக் காரியங்களும் நம் எதிர்காலத்தைக் குறித்ததான ஓர் கேள்விக்குறியை நம்முன் வைக்கிறது. உதாரணமாக, உங்களைப் போன்ற வாலிப தம்பி மற்றும் தங்கைகள் பலரும் உக்ரேனில் நடக்கும் போரின் நிமித்தமாக, தங்கள் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, நாடு திரும்ப வேண்டிய ஓர் சூழல் ஏற்பட்டிருக்கிறது. தங்கள் எதிர்காலத்தைக் குறித்ததோர் கேள்விக்குறி அவர்கள்முன் இருக்கிறது. இப்படிப்பட்டதான நெருக்கடியான சூழலில், பல நேரம் நாம் நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகிறோம்.



ஆனால், மகிழுங்கள் என் அன்பு சகோதர, சகோதரிகளே! நம்பிக்கைத் தரும் தேவனாக, நம் கர்த்தராகிய இயேசு நம்மோடு இருக்கிறார். ஆகவே நாம் பயப்பட வேண்டாம். பலரும் மேற்கூறியதான நெருக்கடியான சூழ்நிலைகள் தங்களுக்கு நேரும்போது, தேவன்மீது தாங்கலடைகிறார்கள். அப்படி நாம் இருக்கக் கூடாது நண்பர்களே. காரணம், அது தேவனுடைய வார்த்தையை சரியாக நாம் அறியவில்லை என்பதைத்தான் காட்டுகிறது, தேவன் வேதத்தில் எங்குமே, நமக்கு எந்தப் நெருக்கடிகளோ, இக்கட்டுகளோ வராது என்பதாக கூறவில்லை. மாறாக, ''...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்'' (யோவான் 16:33) என்றும், ''நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்...'' (சங். 23:4) என்றும் கூறுகிறது.

ஆம் நண்பர்களே, சற்று சிந்தித்துப் பாருங்கள், தேவன் இல்லையென்றால், நம்முடைய கதி என்னவாக இருக்கும். எங்கிருந்து நமக்கு நம்பிக்கை உண்டாகும். உலகத்தில் மாத்திரமல்ல, இவ்வுலகை விட்டு பிரிந்துச் செல்லும்போது, நித்திய ஜீவனின் நம்பிக்கையாக இயேசு கிறிஸ்து நமக்கு இருக்கிறார் என்பதை, ''கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார்'' (கொலோ. 1:27) என்னும் மரணத்தை மிஞ்சிய நம்பிக்கையை தேவன் நமக்கு தருகிறார். ஆம் நண்பர்களே, ''இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்'' (1 கொரி. 15:19) என்று வேதம் சொல்கிறது. தாவீது ராஜாவின் பல சங்கீதங்களை நீங்கள் வாசிக்கும்போது, என் சத்துருக்கள் என்னை நெருக்குகிறார்கள், கண்ணீர் என் படுக்கையாயிற்று என்பதாக மிகவும் நம்பிக்கையில்லா வார்த்தைகளை நாம் காண முடியும். ஆனாலும் அந்த எல்லாச் சங்கீதங்களின் முடிவை நீங்கள் வாசிக்கும் போது, அவைகள் எப்பொழுதும் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் நிறைந்த ஓர் நிலையில்தான் முடியும். அதன் காரணம் என்னவென்றால், என்னதான் அத்தனைப் பிரச்சனைகளும், போராட்டங்களும் தாவீதுக்கு நேர்ந்தாலும், ''கர்த்தர் என்னோடு இருக்கிறார், நானும் அவரோடு இருக்கிறேன்'' என்ற ஆழமான உறுதியும், புரிதலும் ஆகும்.

ஆகவே, என் அன்பு நண்பர்களே! நீங்கள் தற்போது எத்தகைய நெருக்கடியில் போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறியேன். ஆனால் தேவன் அறிவார், அவர் நம்பிக்கையின் தேவன், அவரை நம்புங்கள். தக்க சமயத்தில் உங்களுக்கு உதவி செய்வார், கைவிடமாட்டார்.

**"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28) என்னும் வசனம் தேவன்பேரில் இருக்கும் உங்கள் நம்பிக்கையை வர்த்திப்பதாக! ஆமென்!!** ■



# Petra
## பேதுருவோடு ஒரு பயணம்...
பகுதி 4

**கடந்த மாதங்களில் பேதுருவோடு கப்பற் பயணம், மலையேற்றம் எல்லாம் சென்றது மகிழ்ச்சி தானே, வாருங்கள் சற்று நேரம் பேதுருவோடு அமர்ந்து இயேசுவின் போதனைகளையும் அதிலுள்ள ஆழமான கருத்துக்களையும் அறிந்து கொள்வோம்.**

## மன்னிப்பு முறைமை

இயேசுவின் ஞானம் சமுத்திரத்தைப் போல மகா விஸ்தாரமானது. மீன்பிடித் தொழிலாளியான பேதுரு கடலில் வலை போட்டு மீன்களோடு முத்துக்களை எடுப்பது போல தன்னுடைய கேள்வி கேட்கும் திறனால் இயேசுவின் ஞானத்தை மொண்டு எடுக்கிறார். மத்தேயு 18:21, இந்தப் பகுதியில் பேதுரு இயேசுவினிடத்தில் என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றம் செய்து வந்தால் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று கேள்வி கேட்கிறார். ஏழு தர மட்டுமோ என்ற வினாவிற்கு, ஏழெழுபது தரம் என்று இயேசுவும் பதில் அளிக்கிறார். ஏழெழுபது தரம் என்பது 7 X 70 = 490 தடவை என்று பொருள் அல்ல. 770 = 7 X 7 X 7...... 70 முறை என்று வேத வல்லுனர்கள் கருதுகின்றனர். அதாவது எண்ணிக்கைக்குள் அடங்காத (Infinite) முறை மன்னிக்க வேண்டுமாம். ஒரு சகோதரன் தவறு செய்து விட்டு பின் மனஸ்தாபப்பட்டால் எத்தனை முறை என்றாலும் மன்னிக்க வேண்டும். அதனை கணக்கு வைக்க அவசியமில்லை. இயேசுவை சிலுவையில் அறைந்தவர்கள், மனஸ்தாபப்படவும் இல்லை, மனம் திருந்தவும் இல்லை. இருப்பினும் பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று மன்றாடி ‘மன்னிப்பு’ என்ற வார்த்தையின் மாபெரும் உதாரணம் ஆகிறார். இந்தக் கேள்வியே பேதுருவின் வாழ்வில் முக்கிய பங்கும் ஆற்றுகிறது. பேதுரு இயேசுவை மறுதலித்த போதும், அவரது குற்ற மனசாட்சி அவரை வாதித்த போதும், இயேசு கண்டிப்பாக தன்னை மன்னிப்பார் என்ற விசுவாசம் மேலோங்குகிறது. ஆனால் யூதாஸ் காரியோத்தோ குற்ற மனசாட்சி வாதித்ததினால் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சிந்திக்காமலேயே நான்று கொண்டு செத்தான்.



## எங்களுக்கு என்ன கிடைக்கும்?

மத்தேயு 4:20ல் ‘என் பின்னே வாருங்கள்’ என்ற இயேசுவின் அழைப்பிற்கு கீழ்ப்படிந்து, மீன்பிடித் தொழிலின் மூலதனமான வலைகளை விட்டு விட்டு இயேசுவின் பின் சென்றதாக கூறப்பட்டுள்ளது. மற்ற சீஷர்களும் இயேசுவின் அழைப்பிற்கு கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்றி வந்திருந்தாலும் யாரும் இயேசுவிடம் நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே! எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்று

கேள்வி கேட்கவில்லை. ஆனால் பேதுரு கேட்டார் (மத். 19:27) இதன் மூலம் பேதுருவின் சிந்தனை திறன், எதற்கும் விளக்கம் கேட்கும் துணிச்சல், எதைச் செய்தாலும் ஒரு நோக்கத்தோடு தான் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் தெரிகின்றது. இயேசு மறு ஜென்ம காலத்தில் (மரணத்திற்கு பின் உள்ள வாழ்வில்) மனுஷ குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்ற மற்ற எந்த மனிதருக்கும் கொடுக்கப்படாத உயர்ந்த, உன்னத ஆசீர்வாதத்தை சீடர்களுக்கு கொடுத்திருக்கிறார் மற்றும் இயேசு என்னும் நாமத்தினிமித்தம் ஏதோ ஒன்றை யாரேனும் இழந்தால் அவர்கள் அதனை நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று இயேசு கூறுகிறார் (மத். 19:27-29). உலக மனிதர்களை, ஆஸ்தி, அந்தஸ்து, பதவியில் உள்ளவர்களை பின்பற்றினால் அதன் பலன் சொற்ப காலம் இருக்கலாம். ஆனால் இயேசுவைப் பின்பற்றினால் அதன் பலன் இப்பொழுது வாழும் வாழ்க்கையிலும், மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கையிலும் தொடரும் என்ற மாபெரும் சத்தியத்தை தனது கேள்விக் கேட்கும் திறனால் உலகிற்கு எடுத்துக் காட்டியவர் பேதுருவே.



## 'நான் இடறலடையேன்'

ஒலிவ மலையில் இயேசு தனது சீடர்களிடம் இந்த இராத்திரியில் நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்று கூறுகிறார். எல்லா சீடர்களும் அமைதியாய் இருக்கும் போது எப்பொழுதும் போல முந்திக் கொண்டு பதில் பேசுகிறார். உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் (மத். 26:33) என்ற கூற்றின் மூலம் தன்னை மற்றவர்களோடு ஒப்பிட்டு, மற்றவர்களைவிட தன்னை உயர்வாக கருதி, 'தான்' என்ற சுயம் தலைதூக்கி பேசுவதை காணலாம். மட்டுமல்ல நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன் என்று உறுதியாக கூறுகிறார். இங்கு இயேசு, என் கூட மரிப்பாயா? என்று கேட்கவில்லை. சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது என்பது போல, தன்னுடைய வார்த்தைளினாலே தனக்கே சோதனை வலையை உருவாக்கி கொண்டார் பேதுரு.



## கெத்சமனேயில்பேதுரு

இயேசுவின் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருந்தது. தான் படப்போகிற சிலுவை பாடுகள், நிந்தைகள், அவமானங்கள், மரண வலிகள் எல்லாவற்றையும் அவர் அறிந்து இருந்ததினால் அவரது உள்ளம் கலங்கிக் கொண்டிருந்தது. மிகுந்த மனவேதனையின் போது சிறு சிறு இரத்தக் குழாய்கள் வெடிக்குமாம். அவ்வாறு வெடித்து அவரது வேர்வைத் துளிகளில் இரத்தம் வெளிப்பட்டது. தன்னுடைய பாரத்தை தன் நெருங்கிய சீடர்களான பேதுருவும், யாக்கோபும், யோவானும் உணர்ந்துக் கொள்வார்கள் என்று இயேசு எதிர்பார்த்தார். முக்கியமாக பேதுரு ஒரு மணி நேரமாவது விழித்திருந்து தன்னுடைய பாரத்தை உணர்ந்து தனக்காக ஜெபித்தால் நன்றாக இருக்குமே என்று இயேசுவின் உள்ளம் ஏங்கியது. ஆனால் பேதுருவோ இயேசுவின் உணர்வுகளை உற்று நோக்கவும் இல்லை, உணர்ந்துக் கொள்ளவும் இல்லை. ஒரு சிறு பிள்ளையைப் போல எவ்வித பயமும் கலக்கமும் இல்லாமல் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். இயேசுவுக்கு கெத்சமனே ஒரு பயங்கரமான அனுபவம். ஆனால் பேதுருவுக்கு கெத்சமனே ஒரு நிம்மதியாக தூங்கும் இடமாக இருந்தது. ஏனென்றால் பேதுருவின் சரீரம் இயேசுவோடு பயணித்தாலும், கூடவே இருந்தாலும் இருதயம் தூரமாகவே இருந்தது.

இன்னும் பல சுவாரஸ்ய அனுபவங்களோடு பேதுருவோடு ஓர் பயணம் தொடரும்...

# RED ALERT

நிக்ஸி காலேப்

இந்த Red Alert தொடரின் மூலம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரங்கள் செய்த சிறிய தவறினாலும், கீழ்ப்படியாமையினாலும், தேவ அழைப்பை விட்டு விலகினதையும், அதனால் ஏற்பட்ட அழிவையும் ஒவ்வொரு மாதமும் பார்த்துக் கொண்டு வருகிறோம். கடந்த மாதம் கேயாசியைப் பற்றி தியானித்தோம். இம்மாதம் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதுக்கு எதிராக எழும்பிய அவரின் மகனான அப்சலோமைக் குறித்து பார்க்கப் போகிறோம். ''இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது'' (2 சாமு. 14:25) என்று அப்சலோமைக் குறித்து வாசிக்கிறோம். அதுமாத்திரமல்லாமல் தன் வார்த்தையினால் ஜனங்களை கவரக்கூடிய திறனும் அவனுக்கு இருந்தது. இப்படி தேசத்தையே ஆளக்கூடிய திறனும், ஜனங்கள் தன்னை மெச்சிக்கொள்ளத்தக்கதாக செயல்பட்டாலும், அவன் முடிவு பரிதாபமாகவே இருந்தது. அந்த பரிதாபமான முடிவு என்ன? அதற்கு காரணம் என்ன என்பதை பார்க்கலாம்.

## அப்சலோமியருக்கு தேவனோடு எந்த தொடர்பும் இல்லை



அப்சலோமைக் குறித்து நாம் வாசிக்கும்போது, அவன் தேவனைத் தேடியதாகவோ, தேவனைத் தொழுதுக் கொண்டதாகவோ எழுதப்படவில்லை. தன் தகப்பனாகிய தாவீது கூட சௌந்தரியமுள்ளவராகவும், அழகுள்ளவராகவும், இசைக் கருவி மற்றும் காட்டு மிருகங்களை கொல்லும் தைரியமுள்ளவராகவும் இருந்தாலும், அவர் ஒவ்வொரு காரியத்திலும் தேவனையே சார்ந்திருந்தபடியினால் தான் இஸ்ரவேல் தேசத்திற்கே இராஜாவானார். ஆனால் அப்சலோம் தாவீதைப் போல இல்லாமல், தனக்குப் பிரியமாக நடந்தபடியால் அவனது திறமையும் தாலந்தும் யாருக்கும் பயன்படாமல், அவனுக்கே அழிவை வருவித்தது. அன்பு வாலிபர்களே, நமக்கும் தேவன் அநேக தாலந்துகளைக் கொடுத்திருக்கலாம். ஆனால் நமக்கும் தேவனுக்கும் உறவு இல்லையென்றால் அது யாருக்கும் பயன்படாது. ''...கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்'' (யோவான் 15:4) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

## தேவனுக்கு பயப்படும் பயம் இல்லை

சவுல் தாவீதைக் கொலை செய்ய அவனை பின்தொடரும் போது, தாவீதின் கையில் சவுல் மூன்று முறை ஒப்புக்கொடுக்கப்பட்டார். தாவீது நினைத்திருந்தால் சவுலைக் கொலை செய்திருக்க முடியும். ஆனால் தாவீது கர்த்தருக்கு பயந்தபடியினாலும், தேவன் அபிஷேகம் பண்ணினவரை நான் எப்படி கொலை செய்ய முடியும் என்று சவுலைக் கொல்லாமல் தப்பவிட்டார். ஆனால் அப்சலோமோ தாவீதைக் கொலை செய்து, தான் இஸ்ரவேலின் மேல் இராஜாவாக வேண்டும் என்று தனது இராணுவத்தையே அனுப்பினான். ஆனால் தாவீதோடு தேவன் செய்த உடன்படிக்கையினாலும் வாக்குத்தத்தத்தினாலும், தாவீதை அப்சலோம் மேற்கொள்ளாமல் பாதுகாத்தார். நாமும் கூட தேவனுக்குப் பயப்படாமல் அவர் சித்தமில்லாத

காரியத்தை துணிகரமாக செய்து விடுகிறதினால் தான் பெரிய இழப்பையும், பாதிப்பையும் சந்திக்கிறோம். ''கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்'' (நீதி. 14:27).



## பொறுமையின்மை

ஒவ்வொரு மனிதனையும் தேவன் படைக்கும்போது அவனுக்கென்று தேவன் ஒரு தனித்துவத்தையும், ஒரு நோக்கத்தையும் வைத்திருக்கிறார். ஆனால் அந்த நோக்கம் நிறைவேற சில காலம் ஆகும். அப்சலோமிற்கும் தேவன் ஒரு தனித்துவத்தையும், நோக்கத்தையும் வைத்திருந்திருக்கலாம். ஆனால் அவன் அதைப் பார்க்காமல் தாவீதின் சிங்கத்திற்கு ஆசைபட்டு, தவறான ஆலோசனைகளைக் கேட்டு, அதை அபகரிக்க குறுக்கு வழியில் முயற்சி செய்தான். இவ்வளவு செய்தும் அவன் செய்த காரியம் வாய்த்ததா? இல்லை, இறுதியில் ஒரு கர்வாலி மரத்தில் சிக்கி, யோவாபின் கையில் கொலை செய்யப்படுகிறான்.



''அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' (1 பேதுரு 5:5,6).

**அன்பு வாலிபர்களே! நமக்கென்று தேவன் ஒரு தனித்துவத்தையும், அவரின் நோக்கத்தை நிறைவேற்ற தாலந்துகளையும் திறமைகளையும் கொடுத்திருக்கிறார். ஆனால் நாம் மற்றவர்களைப் பார்த்து அவர்களைப் போல மாற முயற்சித்து, அது முடியாத பட்சத்தில் சோர்ந்து போகிறோம் அல்லது மற்றவர்கள் மேல் பொறாமை கொள்கிறோம். இனி நாம் அப்படி செய்யாமல் கர்த்தர் கொடுத்த தாலந்துகளை வைத்து, நாம் கர்த்தரை சார்ந்து, அவருக்கு பயப்படும் பயத்தோடு செயல்படுத்தினால், இந்த கடைசி கால எழுப்புதலில் தேவன் நம்மை பிரகாசிக்க செய்வது நிச்சயம்!!!**

மீண்டும் அடுத்த Red Alert தொடரில் சந்திப்போம்.

## கோடை வெயிலில் இருந்து காத்துக் கொள்ள...

- வெளியே எங்குச் சென்றாலும் குடிநீர் கையில் வைத்துக் கொள்வது நல்லது. தண்ணீர் எவ்வளவு அருந்துகிறோமோ அந்த அளவுக்கு உடல் நிலை சீராக செயல்படும்.
- காபி, டீ அருந்துவதால் உடல் வெப்பத்தை அதிகரிக்கும். வெப்ப சூட்டை தவிர்க்க தேநீர் அருந்துவதை தவிர்ப்பது நல்லது.
- உணவில் மோர், தயிர் சேர்த்துக் கொள்வது நல்லது. நார்ச்சத்து அதிகம் உள்ள பழங்கள் காய்களை சாப்பிடலாம்.
- கோடை வெயிலில் இருந்து தப்பிக்க பருத்தியால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை உடுத்திக் கொள்ளுங்கள்.
- தினமும் இளநீர், தர்பூசணி ஜூஸ் குடிப்பது நல்லது. இதிலுள்ள நியூட்ரியன்ஸ் நல்ல எனர்ஜியைக் கொடுக்கும்.
- தினமும் எலுமிச்சை ஜூஸ் குடித்தால் உடல் சூட்டை தணித்து, உடல் சூடு சம்மந்தமான பிரச்சனைகள் வராமல் தடுக்கும்.
- உடலை வறண்டுப் போகவிடாமல் அரைமணி நேரத்துக்கு ஒருமுறை ஒரு டம்ளர் தண்ணீர் குடிப்பது அவசியம். காலை, மாலை குளிர்ந்த நீரால் குளித்தால் நல்லது.





# Revival IGNITERS

## EVERY 1ST SUNDAY

**(1ST MAY)**

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road)
9442885315

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

## EVERY 2ND SATURDAY

**(14TH MAY)**

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY

**(8TH MAY)**

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Office Dhanalakshmi Garden Behind Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 5.30PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

IGNITERS

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

## EVERY 3RD SUNDAY
### (15TH MAY)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90, 1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, 9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**NALUMAVADI : (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, (Opp: Govt Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
MBT Road, Navalpur
9500283179 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode.
9750722000

## EVERY 4TH SATURDAY
### (28TH MAY)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## MUMBAI (5PM - 8PM

1st sunday-Dharavi

2nd Sunday- Bhandup

3rd Sunday - Malad

9004882470



# செய்திகள்!

## ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக இந்தியாவின் பொருளாதாரம், முன்பு கணித்ததை விட கூடுதலாக சரியலாம்: சர்வதேச நாணய நிதியம்

சென்னை : ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக நடப்பு நிதியாண்டில் ஏற்கனவே கணிதத்தை விட கூடுதலாக இந்தியாவின் பொருளாதார சரிவு இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி குறிப்பாக, பெரிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி இறங்கு முகத்தில் இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது. அதன்படி இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.2%த்தில் இருந்து 0.8% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையே போர் தொடர்வதால் இந்த சுணக்கம் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போர் மிகப்பெரிய அத்தியாவசிய தேவைகளை உருவாக்கி உள்ளது என்றும் இதனால் தேவைகள் உலகளாவிய அளவில் 35% வரை உயரலாம் என்றும் ஐ.எம்.அப் எனப்படும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. நடப்பு நிதியாண்டில் வர்த்தகம், நிதி மற்றும் பொருள் சந்தையில் பண வீக்கம் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆசிய மண்டலத்தில் இந்தியா, ஜப்பானின் பொருளாதாரம் குறிப்பிடும்படியான சரிவை சந்திக்கும் என்றும் இதற்கு குறைவான நிகர ஏற்றுமதி மெலிந்து போன உள்நாட்டுத் தேவைகள், உச்சபட்சமான எண்ணெய் விலை உயர்வை காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவிலும் இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி சரியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தினகரன், 20 ஏப்ரல் 2022

## கடன்களுக்கான வட்டி அதிகரிப்பு; இ.எம்.ஐ உயரும்

புதுடெல்லி: வீட்டுக்கடன், தனிநபர் கடன் உட்பட கடன்களுக்கான வட்டியை பாரத ஸ்டேட் வங்கி, பாங்க் ஆப் பரோடா உள்ளிட்ட வங்கிகள் அதிகரித்துள்ளன. நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான பாரத ஸ்டேட் வங்கி, எம்.சி.எல்.ஆர் அடிப்படையில் கடன் வட்டியை 0.1 சதவீதம் அதிகரித்து, 7.1 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இந்த புதிய வட்டி விகிதம் கடந்த 15ம் தேதி அமலுக்கு வந்துள்ளது.

இதுபோல் ஒரு மாதம், மூன்று மாதங்களுக்கான எம்.சி.எல்.ஆர் வட்டி விகிதங்களும் 0.1 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. ஸ்டேட் வங்கியை தொடர்ந்து, பாங்க் ஆப் பரோடா, ஆக்சிஸ் வங்கி, கோடக் மகிந்திரா வங்கி ஆகியவை ஓராண்டுக்கான எம்.சி.எல்.ஆர் கடன் விகிதத்தை தலா 0.05 சதவீதம் உயர்த்தியுள்ளன.

இதன்படி ஓராண்டுக்கான எம்.சி.எல்.ஆர் விகிதத்தின்படி பாங்க் ஆப் பரோடா வட்டி 7.35 சதவீதம், ஆக்சிஸ், கோடக் மகிந்திரா வங்கிகள் 7.4 சதவீதம் என நிர்ணயித்துள்ளன. இதைத்தொடர்ந்து பிற வங்கிகளும் வட்டியை உயர்த்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்காரணமாக, மேற்கண்ட வங்கிகளில் தனிநபர், வீடு, வாகன கடன் வாங்கியுள்ளவர்களின் மாத தவணையான இ.எம்.ஐ அதிகரிக்கும் என வங்கி வட்டாரங்கள்தெரிவித்தன.

- தினகரன், 20 ஏப்ரல் 2022

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம்
5 கோடி ஆதாயம்

VISION 2030

## இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்

**10 கோடி**
வாலிபர்களுக்கு சுவிசேஷம்

**1 கோடி**
வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த
**15 மணி நேர ஜெபத்திட்டம்**

தினமும் இந்த தரிசனத்திற்காக
**30 நிமிடம் ஜெபிப்பேன்**

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசேஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

| | | | |
|---|---|---|---|
| DAY - 1 | DAY - 2 | DAY - 3 | DAY - 4 |
| DAY - 5 | DAY - 6 | DAY - 7 | DAY - 8 |
| DAY - 9 | DAY - 10 | DAY - 11 | DAY - 12 |
| DAY - 13 | DAY - 14 | DAY - 15 | DAY - 16 |
| DAY - 17 | DAY - 18 | DAY - 19 | DAY - 20 |
| DAY - 21 | DAY - 22 | DAY - 23 | DAY - 24 |
| DAY - 25 | DAY - 26 | DAY - 27 | DAY - 28 |
| DAY - 29 | DAY - 30 | | |

Name..........................................................

Mobile........................................................

Place..........................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 04 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

